DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
Ragu Thillainathan Sales Representative homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc., Brokerage
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
• Family sponsorship;
• Super visa for parents and grandparents including health insurance;
• Citizenship;
• Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
PROPERTY MAX
+94772332300

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

# UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1490 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 25, 2024

# தமிழரசு கட்சி தனிநபரின் 'கம்பனி'யாக மாறிவிட்டது என சட்டத்தரணி கே.வி.தவராசா ஆவேசம்



ஜனநாயக தமிழரசு கூட்டமைப்பு எனும் பெயரில் ஒரு கட்சியை உருவாக்கி நாங்கள் உங்களிடம் வாக்கு கேட்டு வர வேண்டிய சூழ்நிலையை இலங்கை தமிழரசு கட்சி ஏற்படுத்தியிருக்கின்றது. நாங்கள் விரும்பி வெளியில் வரவில்லை என ஜனநாயக தமிழரசு கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

21-10-2024 அன்றைய தினம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் மண்டபத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவரை இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

16 ஆண்டுகள் தமிழரசு கட்சியின் உள்ளே இருந்தேன். இதன்போது மத்திய குழு, அரசியல் குழு மற்றும் சட்டக் குழுவின் பல குழுக்களில் இருந்தேன். கட்சிக்கு வரும் வழக்குகளுக்கும் நான் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தேன். அரசியல் கைதிகளான குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரது வழக்குகளில் இருந்து இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட, அரசியல் கைதிகளின் வழக்குகளில் நான் ஆஜராகி உள்ளேன். நான் வாதாடிய வழக்குகளில் எவருமே சிறை செல்லவில்லை.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

## Grand Opening Ceremony of the 2nd Location of the ReMax Ace Realty Inc Brokerage's Administration Office was very graceful

# சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த ReMax Ace Realty Inc Brokerage நிறுவனத்தின் இரண்டாவது செயற்பாட்டு அலுவலகத் திறப்பு விழா

கனடாவில் மிகவும் வெற்றிகரமாக இயங்கிவரும் **Re Max Ace Realty Inc Brokerage** நிறுவனத்தின் இரண்டாவது செயற்பாட்டு அலுவலகத்தின் திறப்பு விழா 24-10-2024 அன்று மதியம் சிறப்பாக நடைபெற்றது.

நிறுவனத்தின் முக்கிய பங்காளர்களான **- Vaheesan Jeyaveerasingam, Vijay Selvanayagam, Selvan Kasi Ratheees Paramalingam. Suresh Paramalingam** மற்றும் **Sri Nadarajasundram** ஆகியோர் 150 **Consumers Road. Suite 109, North York** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள இந்த இரண்டாவது அலுவலகத்தை திறந்து வைக்கும் வைபவத்தை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

நிறுவனத்தின் வெற்றிகரமான பங்காளிகளை வாழ்த்த விரும்புவோர் 416 293 4500 என்னும் தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும்





தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிராம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
PRIME LEGAL SERVICES
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

கனடாவிலிருந்து கியூபா சுற்றுலா!
இலங்கையை ஒத்த கால நிலையுள்ள கியுபா தேசத்திற்கு சென்று எமது தாயகச் சூழலை அனுபவியுங்கள். டிசம்பர் மாதம் முதல்வாரத்தில் இங்கிருந்து பயணம். ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்கள் தங்கலாம்.
எம்மால் வழங்கப்படும் உணவோடு உடன் ஊராடு மற்றும் உடன் மீன் மற்றும் மரக்கறி வகைகள் பழங்கள் என அனைத்தையும் சுவையாகவும் சுத்தமாகவும் உண்டு மகிழலாம்.
தொடர்புகளுக்கு: Thava - 647-469-9839
என்னும் இலக்கத்தை அழைக்கவும்


HAPPY
Diwali
Hon.
MARY NG, MP
MARKHAM—THORNHILL
905-479-8100
Mary.Ng@parl.gc.ca
www MaryNgMP.ca


அனைவருக்கும் இனியதீபாவளி வாழ்த்துக்கள்!
HAPPY
DEEPAVALI
தீபாவளித் திருநாளின் ஒளியானது உங்களுக்கு
மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் செல்வத்தையும் வழங்க
வேண்டும்.
Ontario
RAYMOND CHO
MPP - Scarborough North
4559-B Sheppard Avenue East, Scarborough, ON M1S 1V3
416-297-5040 | raymond.choco@pc.ola.org | raymondcho.ca

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign)
JOURNALISTS: Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# எம் இனத்திற்காக தம் இன்னுயிர்களை ஈந்தவர்கள் விண்ணுலகிலிருந்து கண்ணீர் வடிப்பார்கள்!

ஈழத் தமிழர்கள் ஒரு கல்விச் சமூகமாகவும் கற்றவர்களின் சமூகமாகவும் தம்மை நீண்ட காலமாக தக்க வைத்துக் கொண்டவர்கள். கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் அவர்கள் கொடுத்த முக்கியத்துவமே அவர்களை வடக்கு கிழக்கு மாகாணங்களில் மாத்திரமல்ல, முழு இலங்கையிலும் பரந்து வியாபித்து கல்வியினால் தான் பெற்ற உயர் பதவிகளில் அமர்ந்திருந்து தென்னிலங்கை மக்களாலும் போற்றப்பட்டு வந்தார்கள்.

இலங்கையின் ஜனாதிபதியாக அண்மையில் பதவியேற்றுக்கொண்ட அநுர குமார திசநாயக்க அவர்கள் தென்னிலங்கையில் பெரும்பான்மை இன மக்கள் மத்தியில் உரையாற்றுகையில் உலகில் பாதணிகளை கழற்றி வைத்து விட்டு மக்கள் உள்ளே செல்லும் நூலகம் ஒன்று இருக்குமானால். அது யாழ்ப்பாண நூலகம் ஒன்றே என்று குறிப்பிட்டார். அவ்வாறாக தங்கள் பண்பாட்டையும் கல்வியையும் சமாந்தரமாக பேணியவண்ணம் உயர்ந்த நிலையை அடைந்தவர்கள் தமிழ் மக்கள் என்று மேலும் புகழாரம் சூட்டினார் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க. ஆனால் இன்று எம் ஈழத்தமிழ் இனம் வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் மலையத்திலும் அரசியல் என்னும் தளத்தில் நின்று எவ்விதமான கல்வி அறிவு அற்றவர்கள் போன்றும் தங்கள் பண்பாட்டைப் பேணாதவர்கள் போன்றும் பதவிகளுக்காக அற்பத்தனமான ஆசைகளை சுமந்து கொண்டு “மௌன யுத்தம்“ ஒன்றை தங்களுக்குள் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு மொழி பேசுகின்றவர்களாகவும் ஒரே பண்பாட்டை கடைப்பிடிக்கின்வர்களாக ஒற்றுமையாக வாழ வேண்டிய எம் மக்கள் கட்சிகளாகப் பிரிந்து நின்று “காடையர்களின்“ பின்னாலும் பதவி ஆசை கொண்டவர்களாலும் வழி நடத்தப்படுவதை விண்ணுலகிலிருந்த பார்க்கும் எம் இனத்திற்காக தம் இன்னுயிர்களை ஈந்த மாவீரர்கள் நிச்சயம் விண்ணுலகிலிருந்து கண்ணீர் வடிப்பார்கள் என்றே நான் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

“இந்த அற்பர்களுக்காகவா நாம் இத்தனை ஆயிரம் ஆயிரமாக மண்ணில் வீழ்ந்து மடிந்தோம். எம் சொந்தங்களை இழந்தோம்! எம் இளம் வயது சுகத்தையும் சுதந்திரத்தையும் இழந்தோம்! நாம் சுமந்து திரிந்த கனவுகளை மறந்தவர்களாக மக்களுக்காக மடிந்தோம்!. அந்த மக்கள் நாம் வழி நடத்துகின்றோம் என்று தங்களை தலைவர்களாகக் காட்டிக் கொண்டவர்கள். தற்போது எம் மண்ணின் மகத்துவத்தை சிதைக்கின்றார்களே! என்று விண்ணுலகிலிருந்து நம் மண்ணை எட்டிப் பார்ப்பது போல் தெரிகின்றது அல்லவா?

எம் மக்களுக்கு எப்போது வந்தது இவ்வாறான கீழ்த்தரமான அற்ப ஆசைகள? நாம் கேள்விகளை அவர்கள் முன்பாக எழுப்புவதற்கு தயாராக இருக்க வேண்டும்.. மதுச்சாலைகளை நடத்தும் அனுமதியை அரசாங்கத்திடமிருந்து பெற்று அவற்றின் மூலம் நம் மக்களையும் மாணவச் செல்வங்களையும் சீரழிக்க தயாராக இருந்த “தாடி“ வைத்த தலைவர்களும் ஆசிரியப் பதவிகளை வகித்தவர்களும் மீண்டும் தாங்கள் மேற்கொண்ட துரோகத் தனங்களை மறந்து மக்கள் முன்னாள் “எனக்கு வாக்களியுங்கள்“ என்று வருவதற்கு தயாராகிவிட்டார்கள்.

அரசியல் பதவிகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் அதிகாரப் பலத்தையும் அதோடு இணைந்து நிதிப் பலத்தையும் மீண்டும் அனுபவிக்க அவர்கள் மீண்டும் தயாராகிவிட்டார்கள். எங்கள் மண்ணில் மக்களையும் மண்ணையும் காப்பாற்றுவதற்காய் ஒரு தீரமிக்க விடுதலைப் போராட்டம் நடந்தது என்பதற்கு எவ்வித சான்றுகள் இல்லாமல் செய்யும் “பாதகமான“ காரியங்களை நம் மண்ணில் இந்த அரசியல் கயவர்கள் அரங்கேற்றத் தயாராகிவிட்டார்கள்.

நாம் எங்கள் மண்ணில் மக்களையும் மண்ணையும் காப்பாற்றுவதற்காய் போராடிய மாவீரர்களின் கண்ணீரை நிறுத்தச் செய்யும் ஒரே வழி!. அவர்களை தேர்தல் களத்திலிருந்து அகற்றுவதே ஆகும். அவ்வாறானவர்களை சரியாக அடையாளம் கண்டு தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தடுப்பதும் எம் முன்னால் உள்ள ஒரு சவால்கள் நிறைந்த ஒரு பணியாகும்

# இவ்வருட நாடகப் பெருவிழாவில் "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரனுக்கு வழங்கப்பெற்ற பட்டம்" மதங்க சூளாமணி"

(பின் பக்கத் தொடர்ச்சி) மேற்படி மேடையில் காட்சிப்படுத்தப்பெற்ற நான்கு நாடகங்களும் சமூகப் பிரச்சனையும் எமது மக்களின் இயல்பான வாழ்வியலையும் எடுத்துக்காட்டின என்றால் அது மிகையாகாது. அன்றைய தினம் நாடகப் பெருவிழா மேடையில் பல மக்கள் நலன் சார்ந்த விடயங்களும் இடம்பெற்றன. நீண்ட கால நாடகக் கலைஞரும் கவிஞருமான “சோக்கல்லோ“ சண்முகம்“ அவர்களின் பெயரில் அந்த அரங்கம் அமைக்கப்பெற்றிருந்தது ஒரு இலக்கியவாதிக்கு வழங்கப்பெற்ற கௌரவம் என்பதற்காக கணபதி ரவீந்திரன்-ரூபி யோகதாசன் ஆகியோரைப் பாராட்ட வேண்டும்.

மேலும் கனடா- ஸ்காபுறோ நகரில் அமையவுள்ள “தமிழர் சமூக மையம்“ அமைப்புக்குழு சார்பில் கலந்து கொண்ட வர்த்தகப் பிரமுகர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்களிடம் “தமிழர் சமூக மையம்“ கட்டட நிதிக்காக கணபதி ரவீந்திரன்-ரூபி யோகதாசன் ஆகியோர் இணைந்து நிதி அன்பளிப்பை வழங்கினர். பல அரசியல் தலைவர்களும் ஆதரவாளர்களும் கலை இலக்கிய நண்பர்களும் கலந்து கொண்டு குதூகலித்த ஒரு விழாவாக இவ்வருடத்து நாடகப்பெருவிழா விளங்கியது என்றால் அது அனைவருக்கும் பெருமையே!

## பிராம்ப்டன் நகரில் பட்டாசுகள் தடை செய்யப்படுகின்றன



பட்டாசுகள் பற்றிய உபசட்டத்தின் கீழாக, பிராம்ப்டன் நகரில் பட்டாசுகளைப் பயன்படுத்துதல், வாங்குதல், தங்கள் வசம் வைத்திருத்தல், கொளுத்துதல், விற்பனை செய்தல், விற்பனைக்காக வினியோகித்தல் கண்டிப்பாக தடை செய்யப்படுகிறது.

பட்டாசுகள் என்பதில் வாடிக்கையாளர் பட்டாசுகள், காட்சிப்படுத்தலுக்கான பட்டாசுகள் மற்றும் ரோமன் மெழுகுவர்த்திகள், ராக்கெட்டுகல்ள் தரைச்சக்கரங்கள், புஸ்வாணங்கள், பறக்கும் லாந்தர்கள், பாம் வெடிகள் முதலான தடை செய்யப்பட்ட பட்டாசுகள் மட்டுமே அல்லாமல் மற்றவையும் அடங்கும் மத்தாப்புகள் அனுமதிக்கப்படுகின்றன.

**உங்கள் பாதுகாப்புதான் எங்கள் முன்னுரிமைகொண்ட விஷயமாகும்.**

பட்டாசுகளின் மீதான தடையானது,:

- தீப்பற்றுதலின் ஆபத்தை, காயம் மற்றும் குடியிருப்புவாசிகள், செல்லப்பிராணிகள் மற்றும் சொத்துக்களின் மீதான சேதம் ஏற்படுவதைக் குறைக்கிறது.
- காற்று மாசினையும் குப்பைகள் சேருவதையும் தடுத்து நகரைத் தூய்மையாகவும் பசுமையாகவும் வைக்கிறது.
- குழந்தைகள், மூத்தகுடிமக்கள் மற்றும் செல்லப்பிராணிகளுக்கு மன அழுத்தம் உண்டாக்குகின்ற அதிகப்படியான இரைச்சலை குறைக்கிறது.
- விலங்குகள் வசிப்பிடங்களைக் காக்கிறது

**அபராதங்கள்**

விதிகளுக்கு இணங்கத் தவறுபவர்கள் மீது $500 லிருந்து $1,000 வரையும், நீதிமன்ற பிடியாணை வழங்கப்படுமேயானால் $100,000 வரையும் அபராதம் விதிக்கப்படும்,

**நகரத்துடன் இணைந்து பாதுகாப்பாகக் கொண்டாடுங்கள்**

பிராம்ப்டன் நகரமானது அனைவரையும் உள்ளடக்குகின்ற மற்றும் வரவேற்கத்தக்க சூழலையும் உருவாக்க, தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ளது. புத்தாண்டுக் கொண்டாட்டம், கனடா தினம் மற்றும் தீபாவளி ஆகியவற்றை, நகரத்தினால் ஏற்பாடு செய்யப்படும் பைரோடெக்னிக் முறையில் கொண்டாட குடியிருப்புவாசிகள் அழைக்கப்படுகிறார்கள்

*Tamil*

**சேவை வேண்டுகோள்கள்**

பிராம்ப்டன் நகரில் பட்டாசுகளை பயன்படுத்தல் மற்றும் உபயோகித்தல் தொடர்பான சேவை அல்லது தகவல் களுக்கான வேண்டுகோள்கள் இருப்பின் 3-1-1 ஐ அழைக்கவும், 3-1-1 செயலியைப் பதிவிறக்கவும் அல்லது இங்கு வருகை தரவும்: www.brampton.ca

www.brampton.ca/fireworks

BRAMPTON




## Need Assistance for your

First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?

Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?



**Not to Worry!**

Please Call
**Theven Kankesu**
Mortgage Agent, FSCO Lic# M08008759
**416.939.8789**
tvn28@hotmail.com
thevenk1.tk@gmail.com

இலங்கை செய்திகள்
Sri Lanka News



# போலி இலக்க தகட்டுன் காணப்பட்ட சொகுசு கார் ஒன்று தெல்லிப்பழை பொலிசாரால் மீட்பு!

போலி இலக்க தகட்டுன் காணப்பட்ட சொகுசு கார் ஒன்று தெல்லிப்பழை பொலிசாரால் 20-10-2024 அன்றையதினம் மீட்கப்பட்டது.

மேற்படி வாகனம் சுன்னாகம் பகுதியில் மறைத்து வைத்திருந்த நிலையில் தெல்லிப்பழை பொலிசாருக்கு கிடைத்த புலனாய்வு தகவலில் அடிப்படையில் (20-10-2024) அன்று மீட்கப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தெல்லிப்பழை பொலிசாரின் விசேட புலானாய்வு தகவலுக்கமைய தெல்லிப்பழை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி W.M.உதயபால அவர்களின் தலைமையில் மேற்படி கார் மீட்கப்பட்டது.

மேற்படி கார் குற்றச்செயல்களுக்கு அல்லது போதைப் பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டு இருக்கலாம் என பொலிசார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பனை அபிவிருத்தி சபை தலைவராக இரானியேஸ் செல்வின் பொறுப்பேற்றார்



கைதடியில் உள்ள பனை அபிவிருத்தி சபை அலுவலகத்தில் சுப நேரத்தில் இரானியேஸ் செல்வின் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

சுற்றாடல், வன ஜீவராஜிகள் பெருந்தோட்ட உட்கட்டுமான அமைச்சர் விஜித கேரத் அவர்களினால் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர் இலங்கை நிவாக சேவையில் பல்வேறு பதவிகளை வகித்த நிலையில் புதிய அரசாங்கத்தினால் பனை அபிவிருத்தி சபை தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் 21-10-2024 அன்று காலை 10:15 மணியளவில் சுப வேளையில் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

# தமிழ் மக்களுக்கு யதார்த்தமான பாதையை நோக்கி வழிகாட்டுவதற்கு ஈ.பி.டி.பி எப்போதும் தயராக இருக்கின்றது என்கிறார் முன்னாள் அமைச்சர் டக்ளஸ்!



தமிழ் மக்களுக்கு யதார்த்தமான ஒரு பாதையை நோக்கி வழிகாட்டுவதற்கு ஈ.பி.டி.பி எப்போதும் தயராக இருக்கின்றது என சுட்டிக்காட்டியுள்ள கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் எமது வளிமுறைகளை ஏற்று அரசியல் பாலத்தை வழங்க அணிதிரளவெண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்ட செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அம்மாவட்ட மக்களுக்கு இவ்வாறு அழைப்பு விடுத்ததிருந்தார்.

இதன்போது அவர் மேலும் கருத்து கூறுகையில், தமிழர் அரசியல் புலத்தில் மாற்றம் வேண்டும் என தமிழ் மக்கள் உணர்ந்து விட்டார்கள். அதை நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் சாத்தியமாக்கவும் எண்ணுகின்றார்கள். மக்களின் இந்த அரசியல் தெளிவும் மன மாற்றமும் வரவேற்கத்தக்கது.

இதேநேரம் தமிழ் மக்களை பொறுத்தளவில் புலிகளின் அச்சுறுத்தல் அதிகார பலத்துடன் தமிழரசுக் கட்சியின் நிழலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்டமைப்புக்கும் தமிழ் மக்கள் 2004 இல் 22 ஆசனங்களை கொடுத்தும் அதன்பின்னரான காலங்களில் 16,10 என தமது ஆபிலாசைகளை பெற்றுத்தருமாறு ஆணை வழங்கியிருந்தனர். ஆனாலும் அதை பெற்றுக்கொண்ட கறித்த தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தத்தமது சுகபோகங்களை அனுபவித்ததார்களே தவிர தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுத்திருக்கவில்லை.

இதேநேரம் இன்று அந்த கூட்டமைப்பு என்ற ஒன்று தேர்தல் களத்தில் இல்லாதும் போய்விட்டது.

இதேநேரம் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் வடக்கு கிழக்கில் போட்டியிடும் கட்சிகளின் தொகையை பார்க்கும்போது, குறிப்பாக குறித்த கூட்டமைப்பினர் சிதறுண்டு இன்று வெவ்வோறு சின்னங்களில் போட்டியிடுவதை பார்க்கும்போது அது மக்கள் நலன்களுக்கானதாக அன்றி தத்தமது பதவிக்கான ஒன்றாகவே எண்ணமுடிகின்றது.

இந்நிலையில் தற்போதும் ஒரு அரசியல் மாற்றத்துக்கான சூழ்நிலை வந்துள்ளது. குறிப்பாக அந்த மாற்றம் போலித் தேசிய தரப்பினரிடமிருந்து விடுபட்டு தடுமாறாத கொள்கையையும் சிறந்த தலைமைத்துவத்தையும் கொண்ட ஈ.பி.டி.பியினரது எமது பக்கமாக வீசுவதே தமிழ் மக்களுக்கு நன்மையை கொடுக்கும்.

இது ஒவ்வொரு தமிழ் மக்களின் ஆத்மாக்களின் உள்ளங்களிலும் வலுப்பெறும் என்று நம்புகின்றேன்.

இதேவேளை தமிழர்களின் அரசியலில் மிக முக்கியமான தருணமாக இது உள்ளது. அதனால் தமிழ் மக்கள் தமது வாக்குரிமை என்ற ஆதிகாரத்தைக் கொண்டு வீணை சின்னத்தை வலுப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. அது இம்முறை நிகழும் என்று நம்பிக்கை தெரிவித்த செயலாளர் நாயகம் அதனூடாக தமிழ் மக்களுக்கான சிறந்த எதிர்காலத்தை தன்னால் உருவாக்கிக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரிசியின் நிர்ணய விலையில் எந்த மாற்றமுமில்லை

## அரிசி வியாபாரிகளுக்கு ஜனாதிபதி தெரிவிப்பு



அரிசியின் நிர்ணய விலையில் எவ்வித மாற்றத்தையும் மேற்கொள்ள எதிர்பார்க்கவில்லை என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஒழுங்கமைக்கப்பட்ட விவசாயத் திட்டத்தை உருவாக்கி விவசாயிகளுக்கு அதிக நன்மைகளைப் பெறுவதற்கான நீண்டகால வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அரிசி வியாபாரிகள் மற்றும் விவசாய திணைக்கள அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் 22-10-2024 அன்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் நுகர்வுப் பொருட்களின் தற்போதைய விலை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதுடன், மக்களின் பிரதான உணவாக பயன்படுத்தப்படும் அரிசியின் விலையை கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

நிர்ணய விலை அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னர் அரிசியின் விலையை மாற்றுவது நியாயமல்ல எனவும் அரிசி வியாபாரிகளிடம் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

விவசாயிகளிடம் இருந்து அரிசியை நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கும், நுகர்வோருக்கு நியாயமான விலையில் அரிசியை வழங்குவதற்கும் முறையான பொறிமுறையொன்று அவசியம் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அரிசியின் விலை செயற்கையாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நீண்டகாலமாக உத்தரவாத விலைகளை அமுல்படுத்தாததன் காரணமாகவே இந்த விலை ஸ்திரமின்மை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அரிசியை சேகரித்து வைக்கும் மூன்றாம் தரப்பினர் குறித்தும் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டதுடன், அவர்களை பதிவு செய்வது தொடர்பில் கவனம் செலுத்துமாறு விவசாய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில், சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு ஏற்படும் நிதி நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக உள்ளீட்டு விலைகளைக் குறைப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி டட்லி சிறிசேன, நிபுன கம்லத், மித்ரபால லங்கேஸ்வர, ஜயசிறி குணதிலக்க, மேனக கம்லத் உள்ளிட்ட வர்த்தகர்கள் மற்றும் விவசாய அமைச்சின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



# முல்லைத்தீவு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பாக விழிப்புணர்வு

சமூக அடிப்படையிலான புனர்வாழ்வு மூலம் இலங்கையில் இயலாமையுடன் கூடிய நபர்களின் சமூக உள்ளடக்கம் எனும் வேலைத்திட்டத்தினை ஆதரித்து பரிந்துரையாடல் எனும் நிகழ்வு சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலாளர் பிரிவில் இருக்கும் இயலாமையுடன் கூடிய அமைப்புக்கள் ஒன்றிணைந்து இயலாமை உள்ளவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடி முன்மொழியப்பட்ட முன்மொழிவுகள் தொடர்பான முன்வைப்பு இயக்கச்சி றீச்சா பண்ணையில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகி மாலை வரை இடம்பெற்றிருந்தது.

குறித்த நிகழ்வில் இயலாமையுடன் கூடிய நபர்களின் பொருட்கள் சந்தைப்படுத்தல், உரிமைகள், கல்வி சுகாதாரம், வாழ்வாதாரம், மருத்துவம், சம்பந்தமாக அவர்கள் அடைய வேண்டிய தேவை, அவற்றை பூர்த்தி செய்ய தேவையான விடயங்கள், செய்ய இயலாமையாக, சவாலாக இருக்கும் விடயங்களை எவ்வாறு தீர்ப்பது தொடர்பான பரிந்துரையாடல் விழிப்புணர்வு செயற்பாடு இடம்பெற்றிருந்தது.

குறித்த பரிந்துரையாடல் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மகளிர் விவகார மற்றும் மூக சேவைகள் அமைச்சின் செயலாளர் பொ. வாகீசன், சிறப்பு விருந்தினராக றீச்சா உரிமையாளர் பாஸ்கரன், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகங்களின் உதவி பிரதேச செயலாளர்கள், மற்றும் ஏனைய பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள சமூகசேவை உத்தியோகத்தர்கள், மாற்று திறனாளிகள் அமைப்பின் வடமாகாண உபதலைவர், மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட தலைவர், மாற்றுதிறனாளி அமைப்பினர், பொதுமக்கள், சைல்ட்பண்ட், ஒர்கான் நிறுவன ஊழியர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# எனது நம்பிக்கையை தீவக மக்கள் வீணாக்கியது கிடையாது என்கிறார் முன்னாள் அமைச்சர் டக்ளஸ்!



நான் 90 களிலிருந்து இந்த தீவக மக்களின் உணர்வுகளிலிருந்து அவர்களது குரலாய் ஒலித்துக் கொண்டிருக்கின்றேனோ அதேபோன்று எனது நம்பிக்கையையும் தீவக மக்கள் வீணாக்கியது கிடையாது.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு நான் சரியான வழிநடத்தலையும் வழிமுறையையுமே வழங்கிவருகின்றேன்.

அதனால்தான், தீவக மக்கள் எனது சேவைக்கு இன்னும் பக்கபலமாக இருந்து என்னை நாடாளுமன்றுக்கு அனுப்பி வருகின்றார்கள் என தெரிவித்த ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இம்முறையும் அந்த ஆதரவு தொடரும் என வலுவாக நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

வேலணை மற்றும், வடக்கு நாரந்தனை, நாரந்தனை மத்தி ஆகிய பிரதேசங்களின் மக்களுடனான சந்திப்புக்கள் 20.10.2024 அன்றையதினம் நடைபெற்றது.



இதன்போது இவ்வாறு தெரிவித்திருந்த அவர் மேலும் கூறுகையில், நான் 90 களிலிருந்து இந்த தீவக மக்களின் உணர்வுகளிலிருந்து அவர்களது குரலாய் ஒலித்துக் கொண்டிருக்கின்றேனோ அதேபோன்று எனது நம்பிக்கையையும் தீவக மக்கள் வீணாக்கியது கிடையாது.

குறிப்பாக எமது வழிமுறையே சாத்தியமானது என்பதும் இன்று நிரூபணமாகியுள்ளது. இதை ஏற்றுள்ளமக்கள் இம்முறை மத்தியில் உருவாகியுள்ள மாற்றம்போன்று வடக்கிலும் ஈபிடிபியிடம் அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்துவார்கள் என நம்புகின்றேன்.

மேலும் ஈ.பி.டிபியின் தேச-ிய நல்லிணக்கம் மத்திய அரசுடன் மட்டுமல்லாது ஏனைய இன மக்கள் மத்தியிலும் எப்போதும் வலுவாகவே இருக்கின்றது.

அதனால்தான் மக்கள் வழங்குகின்ற ஆணையின் பலத்தின் அடிப்படையிலேயே மத்தியில் உள்ள அரசாங்கத்தோடு ஆட்சியில் பங்கெடுப்பதற்கும், பேரம் பேசலுக்கும் நாடாளுமன்ற தேர்தல்களில் அதிகரித்த ஆசனங்களை வழங்குங்கள் எனவும் கோரிவருகின்றேன்.

அதனடிப்படையில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில், யதார்த்த அரசியலையும், ஈ.பி.டி.பி. கட்சியின் அரசியல் செயற்பாடுகளில் இருக்கின்ற நியாயத்தினையும் புரிந்துகொண்டு உங்களது ஆதரவு பலத்தையும் வழங்கவேண்டுமென்று.

அந்தவகையில் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது கட்சியின் இலக்கை அடைவதற்கு வர இருக்கின்ற நாடாளுமன்ற தேர்தல் எமது மக்கள் எமது கட்சிக்கு அணிதிரண்டு வாக்களித்து எம்மை வெற்றிபெறச் செய்வார்கள் என நம்புகின்றேன் என்றார்.

# அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டியில் வடமாகாணத்தில் முதல் முறையாக 2ஆம் இடத்தை பெற்ற யாழ் திருக்குடும்ப கன்னியர் மட அணி



அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கு இடையே நடாத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் வடமாகாணத்தில் முதல் முறையாக 2ஆம் இடத்தை பெற்றுகொண்ட யாழ் திருக்குடும்ப கன்னியர் மட அணிக்கு யாழில் அமோகவரவேற்பு அளிக்கப்பட்டது.

இலங்கை கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் அகில ரீதியில் நடாத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான கூடைப்பந்தாட்டப் போட்டியில் 17 வயது பிரிவில் இறுதி போட்டியில் பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் மடம் அணியுடன் மோதிய யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் அணி 2ஆம் இடத்தை பெற்றுக்கொண்டது.


இதன் மூலம் வடமாகாண பாடசாலை ஒன்று 17 வயது பிரிவில் முதல்முறையாக தேசிய ரீதியில் 2 ஆம் இடத்தை பெற்றுக்கொண்ட சம்பவமாக இது பதிவாகியது.

யாழ் திருக்குடும்ப கன்னியர் மட அணிக்கு தனுஷ் ராஜசோபனா பயிற்றுவிப்பாளராக கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இன் நிலையில் யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் அணிக்கான கௌரவிப்பு நிகழ்வு பாடசாலை சமூகத்தின் யாழ்ப்பாணத்தில் 18-10-2024 அன்று இடம்பெற்றது.



பாடசாலை அதிபர் மரியசீலி மரியதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்தந்தை திருமகன், வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ராஜசீலன், யாழ்ப்பாண வலய உடற்கல்வி உதவிக் பணிப்பாளர் சாரங்கன், ஆசிரிய ஆலோசகர் சசிகுமார், யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்க செயலாளர் யசிந்தன், யாழ்ப்பாண பிரதேச செயலக விளையாட்டு அமைச்சின் உத்தியோகத்தர், அருட்சகோதரி லூமினா உள்ளிட்ட பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டு இருந்தனர்.



# மன்னார் மாவட்டத்தில் இம்முறை கட்டுக்கரை குளத்தின் கீழ் 31 ஆயிரத்து 339 ஏக்கர் பெரும் போக செய்கை முன்னெடுக்க தீர்மானம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்





- எஸ்.ஆர்.லெம்பேட் (18-10-2024)

மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழ் வருகின்ற வயல் நிலங்களுக்கான பெரும்போக பயிர்ச்செய்கைக்கான 2024-2025 கூட்டம் வெள்ளிக்கிழமை (18) உயிலங்குளத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில், பிரதேச செயலாளர்கள், அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது விவசாய குழு, அதனுடன் இணைந்த 30 விவசாய அமைப்புகள் அழைக்கப்பட்டு,குறித்த கூட்டம் இடம் பெற்றது.

இதன் போது விவசாயத்துடன் தொடர்புடைய திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இதன் போது முன்வைக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக பயிர்ச் செய்கைக்கு உத்தேசிக்கப்பட்ட நிலப்பரப்பாக இவ்வருடம் 31 ஆயிரத்து 339 ஏக்கர் நிலம் இம்முறை பெரும்போக நெற்செய்கை காக பயன்படுத்தப்பட உள்ளது.

அதற்கு அமைவாக இவ்வருட பெரும்போக விவசாய தயார் படுத்தலுக்காக எதிர்வரும் 27ஆம் திகதி (27-10-2024) முதலாவது நீர் விநியோகம் செய்யப்பட உள்ளது. விதைப்பு இறுதித் திகதியாக 4-11-2024 திகதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 41/2 மாத நெற்களுக்கு விதைப்பினை 7-11-2024 திகதிக்கு முன்பாகவும், 3 தொடக்கம் 3 1/2 மாத நெல்லினங்கள் 26-11-2024 க்கு முன்பாகவும் 2 1/2 மாத நெல்லினத்தை விதைக்க விரும்புபவர்கள் 26-11-2024க்கு முன்பாகவும் விதைப்பை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 27-11-2024 தொடக்கம் கட்டுக்கரை குளத்தின் கீழ் விவசாயம் செய்வோர் தேவைப்படுகிறவர்களுக்கு நீர் வினியோகம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதே போன்று அறுவடை ஆரம்பிக்கப் படுகின்ற திகதியாக 11-03-2025 ஆண்டு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்கிற தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது.

பெரும்போக நெற் செய்கையை கருத்தில் கொண்டு கால் நடைகளை கட்டுப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக எதிர்வரும் 20 ஆம் திகதி (20-10-2024) தொடக்கம் 22-04-2025 வரையான காலப்பகுதிக்குள் பெரும்போக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் பகுதிக்குள் கால்நடைகளை விட வேண்டாம் என்று கால்நடை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பெரும்போக செய்கைக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை மீறி அத்துமீறி நீர்ப்பாசன குளங்களுக்கு சொந்தமான குளக்காணிகளில் அத்து மீறி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராக கடந்த முறை அமுல் படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



எனவே எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக கட்டுக்கரை குளத்தின் கீழ் உள்ள விவசாயிகள் தமது பெரும்போக நெற் செய்கையினை முன்னெடுக்குமாறு இதன்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

# மன்னார் மாவட்டத்தில் ஏற்பட உள்ள வட கீழ் பருவப் பெயர்ச்சி காலத்தில் ஏற்பட உள்ள அனர்த்தங்களை குறைப்பது தொடர்பில் அவசர கலந்துரையாடல்



- எஸ்.ஆர்.லெம்பேட் (19-10-2024)

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டம் 18-10-2024 வெள்ளிக்கிழமை மாலை மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட அனைத்து முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கே. திலீபன் மற்றும் முப்படையினர், திணைக்கள தலைவர்கள் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட உள்ள வட கீழ் பருவப் பெயர்ச்சி காலத்தில் ஏற்பட உள்ள அனர்த்தங்களை குறைப்பது தொடர்பாகவும் அதனை எவ்வாறு கட்டுப்படுத்துவது? அனர்த்தம் ஏற்பட்டால் எவ்வாறு தடுப்பது என்பது குறித்து கலந்துரையாடும் அவசர முன்னாயத்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன் போது மன்னார் மாவட்டம் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகின்ற போது இயற்கை அனர்த்தங்களின் போது பாதிப்புக்கு உள்ளாகும் ஓர் பகுதியாக காணப்படுகின்றமையின் காரணமாக அதை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

மத்திக்குச் சொந்தமான நீர்ப்பாசன திணைக்களம், பிரதான குளங்களில் நீர் அதிகமாக பெருக்கெடுக்கும் போது ஏற்படுகின்ற ஆபத்துக்களை குறைப்பது சம்மந்தமாகவும்,மாகாண சபைக்கு சொந்தமான நீர்ப்பாசன குளம், ஆறுகளில் திடீரென ஏற்படுகின்ற வெள்ள நிலையை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தொடர்பாகவும், மன்னார் மாவட்டத்தில் 165க்கும் மேற்பட்ட குளங்கள் கமநல அபிவிருத்தி திணைக்களங்களுக்குள் காணப்படுகின்றது.

அந்த குளங்களில் ஏற்படுகின்ற வெள்ள நிலமையை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் குறித்த கலந்துரையாடலில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

மேலும் மன்னார் மாவட்டத்தில் வெள்ள நிலைமையின் போது மக்கள் இடம் பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்குவதற்கு 30க்கும் மேற்பட்ட தற்காலிக பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட உள்ளது.

அவ்வாறான பாதுகாப்பு நிலையங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்தும், கலந்துரையாடப்பட்டது.

இதை விட மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ள நிலைமை ஏற்படுகின்ற போது அதை கடலுக்கு வெளியேற்று கின்ற சந்தர்ப்பங்களில் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதன் போது மன்னார் நகரில் வெள்ளை நீரை கடலுக்குள் செலுத்துவது தொடர்பாகவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.



# மன்னாரில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட முன்னாள் போராளியான பெண் வேட்பாளர்

## முன்னாள் போராளிகளின் மனமுவந்த ஆதரவு அவருக்கு

- எஸ்.ஆர்.லெம்பேட் (21-10-2024)





வன்னி தேர்தல் தொகுதியில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடும் பெண் வேட்பாளர் போராளி யசோதினி 21-10-2023 திங்கட்கிழமை அன்றைய தினம் திங்கட்கிழமை மன்னாரில் பல பாகங்களிலும் தனது தேர்தல் பரப்புரையை முன்னெடுத்தார்.

அவருக்கு ஆதரவாக முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் கலந்து கொண்டு தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மன்னார் நகர பஜார் பகுதியில் ஆதரவாளர்களுடன் சந்திப்பிலும் ஈடுபட்டார்.

மேலும் மன்னார் சாந்திபுரம் பேசாலை, நானாட்டான் பகுதியிலும் சந்திப்புகளை மேற்கொண்டார்.

இதில் மன்னார் மாவட்ட சங்க உறுப்பினர்கள், போராளி நலம்புரிச் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# மன்னாருக்கு விஜயம் செய்த சுவிஸ் தூதரக அரசியல் விவகாரங்களுக்கான முதல் செயலாளர் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் சந்திப்பு



- எஸ்.ஆர்.லெம்பேட் (22-10-2024)

சுவிஸ் தூதரக அரசியல் விவகாரங்களுக்கான முதல் செயலாளர் ஜஸ்டின் கொய்லட் (Justine Boillat) தலைமையிலான குழுவினர் செவ்வாய்க்கிழமை (22-10-2024) மன்னாரிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட நிலையில் அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை மதியம் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

இதன் போது குறித்த குழுவினர் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் போது மன்னார் மாவட்டத்தின் தற்போதைய நிலமைகள், பொருளாதாரம், தொடர்பாகவும், கேட்டறிந்து கொண்டதாக சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தெரிவித்தார்.



இதன் போது தற்போதைய ஜனாதிபதியின் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய பொறுப்பு கூறல்கள் குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

மேலும் சிவில் சமூக அமைப்புகளின் செயல்பாடுகள் மற்றும் அவர்களின் நிலைப்பாடுகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பில் ஒரு சமூகத்திற்கு ஒரு ஆசனம் கிடைத்தால் அடுத்த சமூகத்துக்கு தேசியபட்டியலில் வழங்க சஜித் தீர்மானம்

## ஜக்கிய மக்கள் சக்தி வேட்பாளருமான அமீர் அலி தெரிவிப்பு

கனகராசா சரவணன்



மட்டக்களப்பு மாவட்டத்திலே ஜக்கிய மக்கள் சக்தியில் தேர்தலில் போட்டியிடுகின்ற ஒரு சமூகத்திற்கு ஒரு ஆசனம் கிடைத்தால் அடுத்த சமூகத்தைச் சேர்ந்தவருக்கு தேசியபட்டியலில் வழங்குவதாக சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது எனவே மாவட்டம் வெல்லுமாக இருந்தால் இரண்டு உறுப்பினர்களை பெற்றுக் கொள்ளமுடியும் இதன் மூலம் தமிழ் முஸ்லீம் உறவுகளும் ஒன்றித்து பயணிக்கமுடியும் என்ற பலமான எதிர்பார்ப்பு இருக்கின்றது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜக்கிய மக்கள் சக்தி வேட்பாளருமான அமீர் அலி தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் அலியின் ஓட்டுமாவடியில் உள்ள அவரது காரியாலயத்தில் 19-10-2024 சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜக்கிய மக்கள் சக்தி சார்பாக நானும் கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் சுஹைர், முன்னாள்பிரதி அமைச்சர் கணேசமூர்த்தி, முன்னாள் ஆரையம்பதி பிரதேசசபை தவிசாளர் தயானந்தன், முன்னாள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனை அமைப்பாளர் சந்திரகுமார். காத்தான்குடி முஜீப், நகுலேஸ்வரன் உட்பட 8 பேர் இணைந்து வெல்லவேண்டும் என எதிர்பார்கின்றோம்.

ஒரு தமிழ் முஸ்லீம் உறவை கட்டியொழுப்பும் நோக்கத்தோடும் எதிர்காலத்தில் இந்த தொடர் நிகழ்சிகள் மூலமாக வடகிழக்கிலே இருக்கின்ற இரு சமூகமும் ஒன்றினைந்து பயணிக்க வேண்டும் என்ற ஒரு முன் ஏற்பாடாக இதை பார்கின்றேன்.

சஜித் பிரேமதாஸ ஒரு சமூகத்திற்கு ஒரு ஆசனம் கிடைத்தால் அடுத்த சமூகத்தைச் சேர்ந்தவருக்கு தேசியபட்டியலில் வழங்குவதாக எடுத்த தீர்மானம் இருக்கின்ற சமயத்திலும் மாவட்டத்திலுள்ள உறவுகளிடம் கேட்பது எந்தவித பிரச்சனைகளும் இல்லாமல் முஸ்லீம் உறுப்பினர் நாடாளுமன்றம் போகின்றார் என்ற குற்றச்சாட்டை தமிழ் உறவுகளில் சுமத்திக் கொள்ளாமல் நேர்மையாகவும் நியாயமாகவும் அந்த வாய்ப்பை கொடுத்தால் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினரை பெறக்கூடியதாக இருக்கும்.

முன்னாள் பிரதி அமைச்சர் கணேசமூர்த்தி நாடாளுமன்றம் தெரிவாகியபோது முஸ்லீம் சமூகத்தில் இருந்து சாதி சமயம் பாராது கணிசமான வாக்குகளை கொடுத்து அவரை பிரதி அமைச்சராக்கி அழகுபார்த்தார்கள் மாவட்டத்தில் 3 இலச்சத்துக்கு மேற்பட்ட தமிழ் வாக்குகள் இருந்தபோதும் கணேசமூர்த்தியே அல்லது ஜக்கிய மக்கள் சகத்தியில் போட்டியிடும் தமிழர் ஒருவருக்கு 20 ஆயிரம் விருப்பு வாக்குகளை அளிப்பீர்களாயின் அவர்களை இலகுவாக நாடாளுமன்றம் அனுப்ப முடியும் அவ்வாறு தைரியம் இல்லாமல் முகநூல் அருவருப்பாக இரு சமூகத்தையும் பிளவு படுத்துகின்ற கருத்துக்களை செய்வதை உங்களது அறிவின் ஆழத்தை கண்டுகொள்கின்றோம்.

கல்குடாவில் ஏ.டபிள்யூ தெய்வநாயகம் ஜயா தொடர்சியாக நாடாளுமன்றம் முடியும் வரை கல்குடா முஸ்லீம் வாக்குகளால் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார் இது ஒரு காலகட்டம் இரண்டாவது காலகட்டம் போராட்டம் உச்ச கட்டத்தில் இருந்தபோது முன்னாள் பிரதி அமைச்சர் கணேசமூர்த்தி நாடாளுமன்றம் சென்றது முஸ்லீம் வாக்குகளை கொண்டுதான் எனவே இவைகளை மறந்துவிட்டு முகநூல் மற்றும் துண்டுபிரசுரங்கள் மூலம் இரண்டு சமூகத்தையும் பிரிப்பதற்கான முயற்சிகளை செய்யாதீர்கள்.

முகநூலில் எழுதும் வீரர்களே இரண்டுசமூகத்திற்குள் பிளவுபடுத்துவதை நான் விரும்பவில்லை இருந்தாலும் இரண்டு சமூகமும் ஒன்றினைத்து மாவட்டம் வெல்லுமாக இருந்தால் அதில் தமிழ் ஒன்றும் முஸ்லீம் ஒன்றாக கட்டாயம் இருக்கும்.


345 கிராமசேவகர் பிரிவுகளை கொண்ட இந்த மாவட்டத்தில் 4 இலச்சத்து 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்காளர்கள் இருக்கின்ற நிலையில் 5 நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான போட்டியில் இந்தமுறை 392 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர் இது ஒரு விந்தையான வேடிக்கையான விடையமாக இதை பார்கின்றோம்.

இதில் அதிகமான சுயேச்சைக்குழுக்கள் போட்டியிடுகின்றன இருந்தபோதும் தேர்தல்வரும் போது அதுக்கென ஒரு அணியினர் இருக்கின்றனர் அவர்கள் பாக்கை தோளில் போட்டுக் கொண்டு சுயேச்சைக் குழுவாக களமிறங்கி நாங்களும் இந்த மாவட்டத்தில் இருக்கின்றோம் என்ற செய்தியை சொல்லவேண்டும் என முனைவோர் அரசியலை செய்ய வேண்டும் என்பதற்கு அந்த பிரதேசத்தில் செல்வாக்கு செலுத்துகின்ற செலத்த இருக்கின்ற கட்சியோடு சேர்ந்து போக முடியாது என்ற பக்குவ மனநிலை அவர்களிடம் இல்லை.

இந்த மனநிலைதான் இவர்களை சுயேச்சைக்கழுவிற்கு அழைத்து செல்கின்றது இது மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தமட்டில் பாரிய புற்றுநோயாக பார்ப்பதேடு மக்களுடைய வாக்குகளை கொஞ்சம் கொஞ்சமாக சிதறடித்து ஒரு நல்ல வேட்பாளரை தெரிவு செய்கின்ற விடையமும் எங்களுக்கு இவ்வளவு பணம் தந்தால் போட்டியில் இருந்து விலகுவதாக ஒரு தொழிலாக செய்கின்ற சுயேச்சைக் குழுக்களும் இருக்கின்றது.

எனவே இது விந்தையான விடையமாக பார்கின்றோம் அதேவேளை எதிர்காலத்திலே இந்த விடையம் சரியாக கையாளப்படவேண்டும் இதற்காக இறுக்கமான சட்டம் கொண்டுவரப்படவேண்டும் அதேவேளை நான் நாடாளுமன்றம் சென்றால் இதற்கான அதிகமான பங்களிப்பு செய்யமுடியும்.

இந்த மாவட்டத்தில் செயற்படுகின்ற பிரதான கட்சிகளை விடுத்து சுயேச்சைக் குழுக்களை ஆதரித்து உங்கள் உறவுக்காக நட்புக்காக அல்லது அவர்கள் பேரம் பேசி இன்னாருவருக்கு வேலை செய்யப் போகின்றோம் என இறுதி நேரத்திலே அவர்களை பணம் பட்டுவாடா பண்ணுகின்ற அளவிற்கு செயற்படுவதற்கு நீங்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என வாக்காளர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மக்கள் இம்முறை இளையோருக்கு ஒரு முறை தமது சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் மன்னார் மாவட்ட வேட்பாளர் ஏ.றொஜன்

மன்னார் நிருபர்




**- எஸ்.ஆர்.லெம்பேட் (24-10-2024)**

மக்கள் தற்போது மாற்றம் ஒன்றை எதிர்பார்த்துள்ளனர். இளைஞர்களும் எனக்கு பூரண ஆதரவை வழங்கி வருகின்றனர். எனவே மக்கள் இம்முறை எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் மன்னார் மாவட்ட வேட்பாளர் ஏ. றொஜன் தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் மன்னார் மாவட்ட வேட்பாளர் ஏ.றொஜன் மாவட்டத்தின் பல பாகங்களிலும் 23ம் திகதி அன்றைய தினம் தனது தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுத்தார்.

கிராம மக்கள், இளைஞர் கழகங்கள், மாதர் சங்கம், பொது அமைப்புக்களை சந்தித்து தனது தேர்தல் பரப்புரையை முன்னெடுத்தார்.

இதன் போது மக்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் தற்போது மாற்றம் ஒன்றை எதிர்பார்த்துள்ளனர். இளைஞர்களும் எனக்கு பூரண ஆதரவை வழங்கி வருகின்றனர்.எனவே மக்கம் இம்முறை எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கி என்னையும் பாராளுமன்றம் அனுப்பி வையுங்கள்.

மக்களின் பிரச்சினைகளை தற்போது வரை நான் நேரில் சென்று பார்வையிட்டு பல்வேறு உதவிகளை வழங்கி வந்துள்ளேன்.

எனவே மக்களின் பூரண ஒத்துழைப்பு இம்முறை எனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. மக்கள் இம்முறை புதியவர்களுக்கும், இளையோருக்கும் ஒருமுறை தமது சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என நேற்றைய தினம் (23) இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவித்தார்.





# மன்னாரில் கடும் மழை – வெள்ள நீரில் மூழ்கிய கிராமங்கள்



**- எஸ்.ஆர்.லெம்பேட் (24-10-2024)**

மன்னார் மாவட்டத்தில் 23-10-2024 அன்று புதன் இரவு முதல் வியாழன் (24) காலை வரை பெய்த தொடர் மழை காரணமாக மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

குறிப்பாக மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சாந்திபுரம், சௌதார், எழுத்தூர், மூர்வீதி உள்ளடங்கலாக பல கிராமங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

மேலும் எழுத்தூர் பகுதியில் உள்ள 30 குடும்பங்களின் வீடுகளுக்குள் நீர் புகுந்ததன் காரணமாக முப்பது குடும்பங்களும் தற்போது எழுத்தூர் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மேலும் மாவட்டத்தின் பல பாகங்களிலும் தேங்கியுள்ள வெள்ள நீரை வெளியேற்ற மக்கள் கிராம நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். மேலும் பல வீடுகளில் வெள்ள நீர் புகுந்துள்ளது.

மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப் தலைமையிலான குழுவினர் குறித்த பகுதிக்குச் சென்று துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



மேலும் மன்னார் மாவட்டத்தில் அனர்த்தம் சம்பந்தமாக உடனடியாக மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு, பிரதேச செயலகம் அல்லது கிராம அலுவலகர்களின் கவனத்திற்கு கொண்டு வருமாறு வருமாறு மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# தமிழ் மக்களின் அரசியல் கலாச்சாரம் மாற்றப்பட வேண்டும் என்கிறார் வன்னி மாவட்ட சுயேட்சைக் குழு வேட்பாளர் சம்சோன் ஜெரோம்



**- எஸ்.ஆர்.லெம்பேட் (24-10-2024)**

ஒரு முறை பாராளுமன்ற உறுப்பினராக தேர் ந்தெடுக்கப் பட்டால் அவர் சாகும் வரை பாராளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும் என்னும் தமிழர்களின் சாபக் கேடான அரசியல் கலாச்சாரத்தினை மாற்றி தகைமையும் திறமையும் உள்ள புதியவர்களை பாரளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என பாராளுமன்ற பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் சுயேற்சைக் குழு கோடாரி சின்னத்தில் இலக்கம் 9 இல் போட்டியிடும் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த வேட்பாளர் சம்சோன் ஜெரோம் தெரிவித்தார்.

ஜெரோம் தன்னைப் பற்றிய அறிமுக நேர்காணலில் 24-10-2024 அன்றைய தினம்இதனை தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நான் சாம்சன் ஜெரோம் மன்னார் மாவட்டம் அடம்பன் நெடுங் கண்டல் பிரதேசத்தைச் சேர்ந்தவன். ஒரு சாதாரண விவசாய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். நான் திருமணம் முடித்திருப்பது பனங்கட்டி கொட்டு எனும் கிராமத்தில். இலங்கையில் எனது முதலாவது பட்டப்படிப்பை முடித்து இங்கிலாந்தில் எனது முதுமாணி பட்டத்தை நிறைவு செய்து இருக்கிறேன்.

நான் இலங்கையில் கடந்த 17 வருடங்களாக பல அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றியதோடு கடந்த பத்து வருடங்களாக அதே பணியை வெளிநாடுகளில் தொடர்ந்து கொண்டு தற்போது அரசியலில் பிரவேசித்திருக்கின்றேன்.

மக்கள் தான் கேட்டார்கள் நேர்மையானவர்கள், ஊழலற்றவர்கள், பேச்சுத் திறன் உள்ளவர்கள், ஆளுமை உள்ளவர்கள் துறை சார்ந்த அறிவு உள்ளவர்கள், கல்வி அறிவுள்ளவர்கள், மக்கள் பணியாற்றுவதில் அனுபவம் உள்ளவர்கள் மும்மொழி திறமை கொண்டவர்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்று விரும்பி கேட்டுக் கொண்டார்கள்.

இவை அனைத்தையும் கொண்டவனாக தான் நான் இருக்கிறேன். அந்த காரணத்திற்காக தான் என்னுடைய தொழிலை விட்டு நான் அரசியலுக்கு வந்திருக்கிறேன். அதே நேரம் மக்கள் என்னை வெற்றிபெறச் செய்வார்கள் என்னும் நம்பிக்கையும் என்னிடம் உள்ளது.

அதை விட இப்பொழுது தமிழ் மக்களின் அரசியலில் எவ்வாறான மாற்றம் வர வேண்டுமென்றால் அடிப்படை அரசியல் கலாச்சார மாற்றம் மாற்றத்திற்கான காலம் அதற்குரிய அத்திவாரங்களை போடவேண்டிய தேர்தலாக தான் நான் இந்த தேர்தலை பார்க்கிறேன்.

ஏன் என்று சொன்னால் இவ்வளவு காலமும் ஒருவர் பாராளுமன்றத்துக்கு சென்று விட்டால் அவர் சாகும்வரை பாராளுமன்ற உறுப்பினராக தான் இருக்க வேண்டும் என்ற இந்த கலாச்சாரம் மாற வேண்டும்.

இந்த சிந்தனை மாற வேண்டும் அடுத்த தலைமுறையினருக்கு தேவையானவர்களை அடையாளம் கண்டு நேர்மையுடன் செயல்படுபவர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் இது பிரதானமானது.

எனவே எனக்கென்று நல்ல தொழில் உள்ளது. தொழிலை வைத்து என் வாழ்வை அபிவிருத்தி செய்து கொள்ளக் கூடிய நிலைமையும் இருந்தது. அவை எல்லாவற்றையும் தூக்கி போட்டு விட்டு மக்களுக்குரிய என்னுடைய சேவையை அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அரசியல் பயணத்தில் நான் காலடி எடுத்து வைத்திருக்கிறேன்.

மக்களே உங்களுடைய ஆதரவுகளை என்னை போன்றவர்களுக்கு அளியுங்கள். எங்களின் வெற்றி உங்கள் வெற்றியாக அமையும் என்று வன்னி மாவட்டத்தின் சுயேற்சைக் குழு கோடாரி சின்னத்தில் இலக்கம் 9 இல் போட்டியிடும் வேட்பாளர் சம்சோன் ஜெரோம் தெரிவித்தார்.




-

# மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி தேசிய விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் இரண்டாம் இடம்

**எஸ்.ஆர்.லெம்பேட் (15-10-2024)**

கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட தேசிய விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் பிரிவு 8/9 மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி நயோலின் அபிறியானா அன்ரோனியோ குபேரக்குமார் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

இவர் யாழ் இந்து கல்லூரியில் நடைபெற்ற மாகாண மட்ட போட்டியில் முதலாம் இடத்தினையும், மகரகம ஜனாதிபதி கல்லூரியில் 3-8-2024 ல் நடைபெற்ற தேசிய மட்ட போட்டியில் இரண்டாம் இடத்தினையும் பெற்று வரலாற்று சாதனையினை எமது மாவட்டத்திற்கும், மாகாணத்திற்கும், பெருமையை பெற்றுத்தந்துள்ளார்.

இவர் 2018 ம் ஆண்டு தேசிய மட்டத்தில் நடைபெற்ற நுபெடளைா சுநளவையவழைெ போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# நாடாளுமன்றத்தில் பேரம்பேசும் சக்தியாக ஈ.பி.டி.பியை தமிழ் மக்கள் வலுப்படுத்துவார்கள்




## ஈ.பி.டி.பியின் வேட்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் நம்பிக்கை!

அமையவுள்ள புதிய நாடாளுமன்றத்தில் மத்தியில் பேரம்பேசும் சக்தியாக ஈ.பி.டி.பியை தமிழ் மக்கள் வலுப்படுத்துவார்கள் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருமான சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் 24-10-2024 அன்றையதினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது கட்சியின் கொள்கை நிலைப்பாட்டை வலுப்படுத்தி அதனூடாக மக்களின் நலன்களையும் அவர்களது எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்து கொள்வதற்காக நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் எமக்கு அதிகளவு ஆதரவை வழங்கவார்கள்.

அத்துடன் மக்கள் எமக்கு வழங்குகின்ற ஆதரவு பலத்தைக் கொண்டே நாம் மத்தியில் அரசமைக்கும் தரப்புக்கு ஆதரவு கொடுத்து, பேரம்பேசும் சக்தியாக அதில் பங்கெடுத்து மக்களின் அபிலாசைகளை பெற்றுக்கொடுக்க முடியும்.

குறிப்பாக அரசியல் புலத்தில் மாற்றம் வேண்டும் என்று எண்ணிய மக்கள் மத்தியில் ஆட்சி அதிகாரத்தை மாற்றி அமைத்துவிட்டனர். அதேபோன்று தமிழ் மக்களின் மனங்களிலும் அந்த மாற்றம் ஏற்படவேண்டும். அந்த மாற்றம் ஈ.பி.டி.பியினராகிய எம்மை நோக்கியதாக இருக்கவேண்டும் என்றே மக்கள் உணர்ந்து கொண்டுவிட்டனர்.

இதேவேளை மத்தியில் ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்காவின் அரசியல் கொள்கைக்கும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் அரசியல் கொள்கைக்கும் இடையில் ஒற்றுமை இருக்கின்றது. ஏனெனில் அவர்களும் போராளிகளாக இருந்து பின்னர் நாடாளுமன்ற ஜனநாயக வழிமுறையூடாக வந்தவர்கள். அதேபோன்றே ஈ.பி.டி.பியும் இருக்கின்றது.

அத்துன் அவர்களும் இடதுசாரிக் கொள்கை உடையவர்கள் எமது கொள்கையும் இடதுசாரிக் கொள்கையாகவே இருக்கின்றது. அத்துடன் எமக்கும் அவர்களுக்கும் இடையே இருக்கின்ற அரசியல் ரீதியான கொள்கைகளும், பரஸ்பர புரிந்துணர்வும் சிறப்பானதாகவும் இருக்கின்றது.

இதேவேளை தேர்தல் வந்தபின்னர் தந்திரோபாயங்களை வகுத்து செயற்படுவது எமது கட்சியின் செயற்பாடு அல்ல. அத்துடன் கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்து வாக்குகளை அபகரிப்பதற்காக திட்டங்களை வகுப்பதும் எமது கட்சியின் கொள்கையும் அல்ல.

எமது கட்சி கிடைக்கின்ற அதிகாரங்களை கொண்டு, கடந்த காலங்களில் எமது சிறந்த பொறிமுறைகளூடாக பல்வேறு முயற்சிகளை செய்து பல சாதகமான அடைவுகளை, வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கின்றது. அத்துடன் ஜதார்த்தமான ஒரு பாதையை நோக்கியே தமிழ் மக்களை வழிநடத்தி வருகின்றது.

இந்நிலையில் தற்போதும் ஒரு அரசியல் மாற்றத்துக்கான சூழ்நிலை வந்துள்ளது. அந்த மாற்றம் ஈ.பி.டி.பியினரது எமது பக்கமாகவே இருக்கும் என நம்புகின்றோம்.

அந்தவகையில் தமிழ் மக்கள் தமது வாக்குரிமையைக் கொண்டு வீணைச் சின்னத்தை வலுப்படுத்தி எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களை பலப்படுத்தி அதனூடாக தமிழ் மக்கள் தமக்கான சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்வார்கள் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கேப்பாப்புலவு காணிகளை விடுவித்து தருமாறு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை

- நடராசா லோகதயாளன்

முல்லைத்தீவு - கேப்பாப்புலவு காணிகளை விடுவித்து தங்களிடம் ஒப்படைக்குமாறு 24-10-2024 அன்றையதினம் காலை கேப்பாப்பிலவு மக்கள் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரனை சந்தித்து மகஜர் ஒன்றினை கையளித்துள்ளனர்.

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளினை மீட்டுத் தருமாறு தமது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றினை சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம் (Ecdo), கேப்பாபிலவு கிராமமக்கள் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் மகஜரினை ஒப்படைத்துள்ளனர்.

மகஜரினை பெற்ற அரச அதிபர் எதிர்வரும் மாதம் 8 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு ஆளுனர் வருகை தரவுள்ளதாகவும் இவ் விடயம் தொடர்பில் நேரில் கதைப்பதாகவும் குறித்த மக்களிடம் தெரிவித்திருந்தார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மக்கள், பல வருடகாலமாக தாம் தமது காணிகளை இழந்து சிரமங்களுக்கு மத்தியில் வாழ்வதாகவும் பல போராட்டங்கள் செய்தும் இதுவரை தீர்வு இல்லை என்றும் தமது காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

கேப்பாப்புலவு மக்களின் ஒருபகுதியினரின் காணிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் இன்னும் மக்களின் குடியிருப்புக்கள் காணிகள் இன்றும் இராணுவ கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது அதனை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என தெரிவித்திருந்தனர்.

இதேவேளை கடந்த 21.9.2024அன்றையதினம் வடமாகாண ஆளுனர் நா.வேதநாயகன் அவர்களை குறித்த மக்கள் நேரில் சந்தித்து காணி விடுவிப்பு தொடர்பாக மகஜர் ஒன்றினை கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# பெண்கள் சிறுவர்களுக்கு எதிராக அநீதிகளை நிறுத்த குரல்கொடுக்க பெண்களே எனக்கு வாக்களிக்கவும்

கனகராசா சரவணன்

## தேசிய மக்கள் கட்சியின் பெண்வேட்பாளரான வனிதா செல்லப்பெருமாள்



மட்டக்களப்பு ஈவட்டத்திலுள்ள இயற்கை வளங்களை பல அரசியல்வாதிகள் மற்றும் மண் மாபியாக்களால் அழிக்கப்பட்டு வருகின்றது அதேபோல பெண்கள் சிறுவர்களுக்கு எதிரான அநீதிகள் இடம்பெற்றுவருகின்றது எனவே இவைகளை தடுத்து நிறுத்தப்படவேண்டும் பெண்கள் சமத்துவம் பேணப்படவேண்டும் இதற்கு குரல் கொடுக்க பெண்களாகிய நீங்கள் எங்கள் கட்சி திசைகாட்டிக்கும் எனது 8ம் இலக்கத்திற்கும் வாக்களிக்குமாறு தேசிய மக்கள் கட்சியின் பெண்வேட்பாளரான வனிதா செல்லப்பெருமாள் கேட்டுக் கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு கல்லடியிலுள்ள அவரது காரியாலயத்தில் 24ம் திகதி அன்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி சார்பாக பெண் வேட்பாளராக களமிறங்கியுள்ளோன் பெண்களுக்காக குரல் கொடுப்பதற்காக கடந்த 15 வருடங்களுக்கு மேலாக அதிகளவான பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 35 ஆயிரத்துக்கு மேற்பட்ட விதவை பெண்கள் இருக்கின்றனர் அதேபோல வறுமை கோட்டின் கீழ் ஆயிரக்கணக்கான மக்கள் இருக்கின்றனர்.

இந்த தலைமைதாங்கும் குடும்பங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு இதுவரை சரியான வாழ்வாதாரம் செய்யப்படவில்லை எனவே அவர்களின் நிலையான நிரந்தர வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதற்காக சுயதொழில் வாய்ப்புக்கள் மற்றும் தொழிற்சாலைகள் அமைத்தல் போன்ற பல திட்டங்களுடன் களமிறங்கியுள்ளேன்.

இந்த நாட்டில் பல இயற்கை வளங்களை பல அரசியல்வாதிகள் மண்மாபியாக்கள் மண்அகழ்வு மற்றும் காடழிப்பு போன்ற செயற்பாட்டினால் மாவட்டத்திலுள்ள பல ஏக்கர் கணக்கான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது அதேபோல மீன்பிடி பாதிக்கப்பட்டுள்ளது இவ்வாறு பல பிரச்சனைகள் மாவட்டத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

அதேவேளை பல ஏக்கர் அரச காணிகள் பல அரசியல்வாதிகளால் சூறையாடப்பட் டுள்ளது இவற்றை முற்றிலும் இல்லாதொழிக்க முடிந்த சட்டநடவடிக்கையினை எங்கள் ஆட்சியில் எடுப்போம் அதேபோன்று கல்வியில் இடம்பெற்றுள்ள மோசடிகளை சீர் செய்து சிறுவர்களுக்கான கல்வியை மேம்படுத்துவதற்கான பல திட்டங்கள் செயற்படுத்த உள்ளோம்.

எனவே இலங்கையில் 50 வீதமான பெண் வாக்காளர்களாக இருக்கின்றனர் இருந்தபோதும் தேர்தல் களத்தில் அதிகமான பெண்கள் களமிறங்கியுள்ளனர் தேசிய மக்கள் சக்தி பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்திருக்கின்றது சமத்துவம் பேணப்படவேண்டும் என்பதற்காகவே எனவே பெண்களாகிய நீங்கள் எங்கள் கட்சி திசைகாட்டிக்கும் பெண்ணாகிய எனது 8ம் இலக்கத்திற்கும் வாக்களிக்குமாறு அன்பாக கேட்டுக் கொள்கின்றேன்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணம், கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் பரிசளிப்பு விழா

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம் - வடமராட்சி, கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரியின் பரிசளிப்பு விழா 22-10-2024 பிற்பகல் 2.00 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் முதல் நிகழ்வாக விருந்தினர்கள் வீதியிலிருந்து மாலை அணிவிக்கப்பட்டு பாண்ட் வாத்திய இசை முழங்க விழா மண்டபம் வரை அழைத்துவரப்பட்டு நிகழ்வுகள் பாடசாலை அதிபர் P.அரவிந்தன் தலைமையில் ஆரம்பமாகின.



இதில் முதல் நிகழ்வாக மங்கள சுடர் ஏற்றப்பட்டது. அதனை தொடர்ந்து வரவேற்பு நடனம், வரவேற்பு உரை, தலைமை உரை என்பன இடம் பெற்றதை தொடர்ந்து கலை நிகழ்வுகள், விருந்தினர் உரைகள் என்பன இடம் பெற்றன. அதனை தொடர்ந்து கல்லூரியில் பல்வேறு சாதனையாளர்களுக்கான கௌரவிப்பு, பரிசில்கள் வழங்கல், சான்றிதழ்கள் என்பவற்றை நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் S.P.ஆதித்தன், சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட பருத்தித்துறை நகர சபை அபிவிருத்தி உத்தியோகத்தரும், பழைய மாணவர் சங்க தலைவருமான இளையதம்பி சேந்தன், முன்னாள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் தமிழ் துறை பேராசிரியர் S.சிவலிங்கராசா சிறி ஜெயவர்தனபுர பல்கலைக் கழக உயிரியல் இராசாயனத் துறை பேராசிரியர் திருமதி லோகினி ஆதித்தன், ஆகியோர் வழங்கிவைத்தனர்.



இந்நிகழ்வில் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# கட்சிகள்; சுயேச்சைகள்; அனுர; அர்ச்சுனா... சலிப்படைந்து விலகும் மக்கள்?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

மருத்துவர் அர்ஜுனா ஊசிச் சின்னத்தில் போட்டியிடுகிறார். ஒரு விருந்தகத்தில் அவர் உணவருந்திக் கொண்டிருக்கும் பொழுது மான் கட்சியை சேர்ந்த ஒரு பெண் வேட்பாளர் அவருக்கு தன்னுடைய துண்டுப் பிரசுரத்தை விநியோகிக்கின்றார். அந்த காட்சியை அர்ஜுனா வழமை போல நேரலையில் விடுகிறார். அந்தப் பெண்ணிடம் கேள்வி கேட்கிறார். அந்தப் பெண் ஒரு கட்டத்தில் அவரிடம் இருந்து விலகிச் செல்கிறார். அர்ஜுனா அந்த வேட்பாளர் வழங்கிய துண்டுப் பிரசுரத்தால் தன் வாயைத் துடைக்கிறார். அதையும் நேரலையில் விடுகிறார்.

ஒரு சக வேட்பாளரை அந்த மருத்துவர் எப்படி நடத்தியிருக்கிறார் என்பது அவருடைய அரசியல் பண்பாட்டையும் தனிநபர் ஒழுக்கத்தையும் கேள்விக்கு உள்ளாக்கக்கூடியது. ஆனால் சில மாதங்களுக்கு முன் அவர் சாவகச்சேரியில் ஒரு கலகக்காரனாக எழுச்சி பெற்றார்.தனக்கு கிடைத்த பிரபல்யத்தை அவர் மிகவும் திட்டமிட்டு கட்டமைத்தார். யூ டியூப்பர்களின் காலத்தில் அது அவருக்கு மிகவும் இலகுவாக இருந்தது. தனக்கு கிடைத்த பிரபல்யத்தை இப்பொழுது அவர் அரசியலில் எதிர்பார்ப்போடு முதலீடு செய்கிறார். அவருடைய தேர்தல் சின்னம் ஊசி. சமூக வலைத்தளங்களால் ஊதிப் பெருப்பிக்கப்பட்ட ஒரு பலூன் அவர். அவருடைய ஊசியே அவரைக் குத்தி வெடிக்கச் செய்து விடும் என்பதைத்தான் அந்த விருந்தகத்தில் மான் கட்சியின் பெண் வேட்பாளரை அவர் கையாண்ட விதம் நமக்கு உணர்த்துகின்றதா?

அவருக்கு கிடைத்த பிரபல்யத்துக்குக் காரணம் என்ன? சாமானியர்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் சமூக வலைத்தளங்களா? அல்லது, மருத்துவத் துறைக்குள் காணப்படும் விமர்சனத்திற்குரிய அம்சங்களா? அல்லது அந்த விவகாரங்களை அந்த துறை சார்ந்த ஒருவரே வெளியே கொண்டு வந்ததுதான் காரணமா?

இல்லை. இவற்றை விட ஆழமான ஒரு காரணம் உண்டு. தமிழ் மக்கள் தங்களுக்காக, தங்களுக்குரிய நீதிக்காக யாராவது போராட வரமாட்டார்களா? தங்களுக்காக தன்னைத் தியாகம் செய்ய யாராவது வரமாட்டார்களா? என்று எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் என்பதுதான் அதற்குரிய முக்கிய காரணம். அதாவது அதைச் சுருக்கமாகச் சொன்னால், தலைமைத்துவ வெற்றிடம் ஒன்று காணப்படுகிறது என்று பொருள்.

அர்ச்சுனாவின் பின்னால் மட்டுமல்ல கடந்த 15 ஆண்டுகளிலும் தமிழ் மக்கள் வெவ்வேறு தரப்புகள், கட்டமைப்புக்கள் போன்றவற்றை நோக்கி அதிகரித்த எதிர்பார்ப்போடு அவற்றின் பின் சென்றிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த தலைமைத்துவம் அல்லது எதிர்பார்த்த தொடர்ச்சியான காட்சி மாற்றங்கள் நடக்கவில்லை.

தமிழ் மக்கள் பேரவை தோன்றிய பொழுது தமிழ் மக்கள் அதிகம் எதிர்பார்ப்போடு அதை நிமிர்ந்து பார்த்தார்கள். இரண்டு எழுக தமிழ்களிலும் கலந்துகொண்ட அனைவருமே தாமாக வந்தவர்கள்தான். யாரும் வாகனம் விட்டு அழைத்து வரவில்லை.

விக்னேஸ்வரன் மாகாண சபையில் சுமந்திரன் அணியினரால் சுத்திவளைக்கப்பட்ட பொழுது அவருக்கு கிடைத்த ஆதரவு தன்னியல்பானது. யாரும் திட்டமிட்டு ஒழுங்கமைக்காதது. ஆனால் விக்னேஸ்வரன் தனக்கு கிடைத்த ஆதரவையும் அபிமானத்தையும் அங்கீகாரத்தையும் தொடர்ந்து தக்க வைக்க முடியாதவராகத் தன்னை நிரூபித்தார். தமிழ் மக்கள் பேரவையின் இயங்கா நிலைக்கு அவரும் ஒரு காரணம்.

மாகாண சபையின் காலம் முடிந்த பொழுது சமூக செயற்பாட்டாளராகிய திரு செல்வின் என்னிடம் கேட்டார்... "விக்கி இப்பொழுது என்ன முடிவை எடுக்க வேண்டும்? ஒரு கட்சியை தொடங்கி கட்சி அரசியலை முன்னெடுப்பதா? அல்லது தமிழ் மக்கள் பேரவையை ஒரு மக்கள் இயக்கமாக வளர்த்தெடுத்து அதற்கு தலைமை தாங்குவாரா?" என்று. நான் சொன்னேன்... "அவர் மக்கள் இயக்கத்துக்கு தலைமை தாங்கத் தேவையான வாழ்க்கை ஒழுக்கத்தையோ அல்லது அரசியல் தரிசனத்தையோ கொண்டவர் அல்ல. அநேகமாக அவர் கட்சியைத் தொடங்கி ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வரக்கூடும்" என்று.

விக்கி ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வந்தார். ஆனால் அவர் மாகாண சபைக்குள் சுமந்திரன் அணியினால் சுத்திவளைக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் அவருக்கு இருந்த கவர்ச்சியும் ஜன வசியமும் இப்பொழுது இல்லை.

தமிழ் மக்கள் பேரவை ஓய்வுக்கு வந்து சில ஆண்டுகளில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணி இடம் பெற்றது. அங்கேயும் தமிழ் மக்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டார்கள். தாமாகத் திரண்டார்கள். அது ஒரு பெரிய எழுச்சி. தூதரகங்களைத் திரும்பிப் பார்க்க வைத்த எழுச்சி. படைத் தரப்பை முகாம்களுக்குள் முடக்க வைத்த ஒரு எழுச்சி. ஆனால் அது பின்னர் பலூன் ஆகியது. அந்த பேரெழுச்சியின் பெயரால் உருவாக்கப்பட்ட அமைப்பு அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிக்கு போகவில்லை. அந்த அமைப்பின் இணைத் தலைவர்கள் ஆங்காங்கே மக்கள் போராட்டங்களில் காணப்படுகிறார்கள். ஆனாலும் அது ஒரு பேரியக்கமாக வளர்ச்சி பெறவில்லை.

அப்படித்தான் கடந்த மாதம் நடந்த ஜனாதிபதி தேர்தலையொட்டி தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி 2 லட்சத்து 26 ஆயிரம் மக்கள் திரண்டார்கள். தமிழ்த் தேசியப் பொதுக்கூட்டமைப்பு என்று அழைக்கப்படுகின்ற, கட்சிகளும் மக்கள் அமைப்பும் இணைந்த ஒரு ஹைபிரிட் கட்டமைப்பை நோக்கி தமிழ் மக்கள் அதிகரித்த எதிர்பார்ப்போடு காணப்பட்டார்கள். ஆனால் சில நாட்களில் வந்த நாடாளுமன்ற தேர்தலில் பொதுக் கட்டமைப்பு போட்டியிடவில்லை. பொதுக் கட்டமைப்பு தொடர்ந்து வரும் எல்லா தேர்தல்களிலும் கட்சிகளையும் மக்கள் அமைப்புகளையும் ஒன்றிணைக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்தார்கள். இப்பொழுதும் எதிர்பார்க்கிறார்கள். திருக்கோணமலையில் சங்கையும் வீட்டையும் இணைத்தது பொதுச் சபையின் மதத் தலைவர்களில் ஒருவராகிய திருமலை ஆயர்தான்.

எனவே மக்கள் அமைப்பு நினைத்தால் மீண்டும் கட்சிகளை ஒருங்கிணைக்கலாம், அதன்மூலம் வாக்குச் சிதறலைத் தடுக்கலாம் என்று எதிர்பார்ப்பு சங்குக்கு வாக்களித்த மக்கள் மத்தியில் பரவலாக உண்டு. தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு முன்கையெடுத்திருந்தால் அரங்கில் இப்பொழுது தோன்றியிருக்கும் பெரும்பாலான சுயேச்சைகள் அந்த கட்டமைப்புக்குள் வந்திருக்கும் என்பது உண்மை. கட்சிகளுக்குள் உடைந்து வெளியே வருபவர்கள் பொதுக் கட்டமைப்பை நோக்கி வந்திருப்பார்கள். ஆனால் அது நடக்கவில்லை. பொதுக் கட்டமைப்பு இப்பொழுது நடைமுறையில் இல்லை. பொதுக் கட்டமைப்புக்குள் காணப்பட்ட மக்கள் அமைப்பு நாடாளுமன்றத் தேர்தலைக் கையாள்வதில்லை என்று முடிவெடுத்தது. இதனால் சங்குக்கு வாக்களித்த மக்கள் மத்தியில் காணப்பட்ட உற்சாகம் ஒப்பீட்டளவில் வடிந்துவிட்டது.

இப்படியாக தமிழ் மக்கள் காலத்துக்கு காலம் வெவ்வேறு அமைப்புகளின் மீதும் நபர்களின் மீதும் தங்கள் நம்பிக்கைகளை முதலீடு செய்கிறார்கள். எதிர்பார்ப்போடு பார்க்கின்றார்கள். யாராவது வந்து மீட்க மாட்டார்களா? எந்தக் கட்டமைப்பாவது ஒரு காட்சி மாற்றத்தை ஏற்படுத்தாதா? என்று எதிர்பார்ப்போடு அந்த அமைப்பின் பின் அல்லது நபர்களின் பின் செல்கிறார்கள். முடிவில் உற்சாகமெல்லாம் வடிந்து போய்ச் சலித்து அரசியலில் ஆர்வமற்று ஒதுங்கி விடுகிறார்கள்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலிலும் அவ்வாறு தமிழ் மக்கள் சலிப்போடு ஒதுங்கி நிற்கும் ஒரு நிலைமை தோன்றக்கூடும் என்ற பயம் பரவலாக உண்டு.

சில கிழமைகளுக்கு முன்பு ஜனாதிபதி தேர்தலில், தேசமாகத் திரள்வோம் என்று நின்ற மக்கள், இப்பொழுது தேசத்தைச் சிதறடிப்போம் என்று கங்கணம் கட்டிக் கொண்டு களத்தில் இறங்கியுள்ள கட்சிகளையும் சுயேச்சைகளையும் சலிப்போடும் ஏமாற்றத்தோடும் விரக்தியோடும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த விரக்தி சில சமயம் அனுர அலையின் பின் மக்களை உந்தித் தள்ளிவிடும் என்று ஒரு மூத்த இலக்கியவாதி என்னிடம் சொன்னார். "தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு தேர்தலில் இறங்கவில்லை என்றால் நான் ஜேவிபிக்குத் தான் வாக்களிக்க போகிறேன்" என்றும் அவர் சொன்னார். அந்தளவுக்கு தமிழ்த் தேசிய சக்திகளின் மீது அவர் சலிப்பும் விரக்தியும் அடைந்து விட்டார். இதே நிலைமை திருக்கோணமலையிலோ அம்பாறையிலோ ஏற்பட்டால் என்ன நடக்கும்?

## வீணாவின் கவிக்கணை

பூக்கள் பூப்பதும்
காய்கள் காய்ப்பதும்
கனிகள் இனிப்பதும்
அதை உயிர்கள்
சுவைப்பதும்
இயல்பென்றால்
மனிதன் பிறப்பதும்
இந்த
உலகை படிப்பதும்
இன்ப துன்பத்தை
அனுபவித்தலும்
கடைசியில்
இறப்பதும் கூட இயல்பு தான்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழர்களுடைய வாக்குகள் தமிழ் தலைமைகளுக்கே அளிக்கப்பட வேண்டும் என யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் வலியுறுத்து!

பு. கஜிந்தன்

**"கடந்த காலத்தில் எம்மை ஏமாற்றி அரசியல் செய்தவர்களை புறக்கணித்துவிட்டு இம்முறை ஒரு சரியான தலைமைத்துவத்தை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது"**

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள பாரிய அரசியல் மாற்றம் வடக்கு கிழக்கிலும் ஏற்பட வேண்டும் என்ற நிலைப்பாடு இளைஞர்கள் மத்தியில் பெரும் அலையை ஏற்படுத்தியுள்ளது என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் திரு. சிந்துஜன் தெரிவித்துள்ளார்.

18ம் திகதி வெள்ளிக்கிழமையன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2010, 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டு என மூன்று பாராளுமன்ற தேர்தல்களை நாங்கள் யுத்தத்திற்கு பின்னர் எதிர் கொண்டிருந்தோம். அந்த மூன்று பாராளுமன்ற தேர்தல்களிலும் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளும், கட்சிகளினுடைய ஏமாற்று வேலைகளும் மக்கள் மத்தியில் ஒரு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அது மறுக்க முடியாது.

அந்தவகையில் இந்தமுறை வடக்கு - கிழக்கில் ஒரு பாரிய மாற்றம் ஏற்பட வேண்டுமென்ற அலை இளைஞர்கள் மத்தியில் உருவாகியுள்ளது. தென் இலங்கையிலே ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் வடக்கு - கிழக்கிலும் ஏற்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனாலும் நாங்கள் எங்களுடையவர்களையே தெரிவு செய்ய வேண்டும். அந்த மாற்றம் தென்னிலங்கை தரப்பை ஆதரிக்க கூடாது.

எங்களுடைய வடக்கு - கிழக்கு தமிழர்கள் தமிழ் தேசியம் என்ற ரீதியிலேயே நின்று, தமிழர்களின் உரிமைக்காக குரல் கொடுக்கக் கூடியவர்களை தெரிவு செய்ய வேண்டும் என்பதையே நாங்கள் இந்த இடத்திலே கேட்டுக்கொள்கின்றோம். தென் இலங்கை தரப்புகளை புறக்கணித்து இந்த முறை தேர்தலிலும் எமது உரிமைகளை பறைசாற்ற வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

எங்களுடைய அரசியல் காட்சிகளும் சிந்தித்து செயல்பட வேண்டும். ஏனென்றால் கடந்த காலங்களிலே, மக்களை எங்கே கொண்டு செல்கின்றீர்கள் ஒரு கொள்கை கூட உங்களிடம் இல்லை. யுத்தம் நிறைவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் தமிழர்களது அரசியல் தீர்வு குறித்து எந்த ஒரு கட்சியும் தீர்வு திட்டத்தை முன்னகர்த்திக்கொண்டு செல்லவில்லை என்பது மிகவும் ஒரு கவலைக்கிடமான, வெட்கப்பட வேண்டிய விடயம்.




இந்த நேரத்திலாவது தமிழ் மக்களாகிய நாங்கள் கடந்த காலத்தில் எம்மை ஏமாற்றி அரசியல் செய்தவர்களை புறக்கணித்துவிட்டு இம்முறை ஒரு சரியான தலைமைத்துவத்தை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி எமது உரிமையை பறைசாற்ற வேண்டும் என இந்த இடத்தில் கேட்டுக்கொள்கின்றோம்.

அந்த அடிப்படையில் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தமது வாக்குகளை தமிழ் தரப்புகளுக்கு அளிக்கப்பட வேண்டுமே தவிர மாறாக தென் இலங்கை தரப்பிற்கு அழைக்கக்கூடாது என்பதனையும் இந்த இடத்தில் நாங்கள் வலியுறுத்த விரும்புகின்றோம்.

நாங்கள் எப்போதுமே உரிமை அரசியலை வேண்டி நிற்கின்ற ஒரு சமூகம். உரிமை அரசியலுக்காக போராடுகின்ற ஒரு சமூகம். நாங்கள் உரிமை அரசியலை நிலைநாட்ட வேண்டும் என்றால் எங்களுடைய உரிமைக்கு குரல் கொடுக்கக்கூடிய அரசியல் தலைவர்களை தெரிவு செய்ய வேண்டுமே தவிர, காட்சிகள் மீதுள்ள விரக்தி மனநிலையால் தங்களது வாக்குகள் தென்னிலங்கை தரப்புக்கு சென்று விடக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.



# புத்தசாசன சமய விவகார மற்றும் கலாசார அமைச்சினில் நடாத்தப்படும் பிரதீபா விருதுக்கான போட்டி!

புத்தசாசன சமய விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் நாடளாவிய ரீதியில் உள்ள கலாசார மத்திய நிலையங்களுக்கிடையில் நடாத்தபடும் பிரதீபா விருதுக்கான போட்டி 19-10-2024 அன்றையதினம் அளவெட்டி அருணோதயா கல்லூரியில் இடம்பெற்றிருந்தது.

அந்தப்போட்டியில் தென்மராட்சி கலாசார மத்திய நிலைய மாணவர்கள் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

அந்தவகையில் கிராமிய குழுப் பாடல் போட்டியில் ஆரம்ப பிரிவு வரணி மாணவர்கள் - முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

அதேவேளை மிருதங்கப் போட்டியில் வரணி மாணவன் பங்கு பற்றி முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளார்

அத்துடன் கிராமிய குழு பாடல் போட்டியில் கனிஸ்ட பிரிவு - வரணி மாணவர்கள் - இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

தென்மராட்சி கலாசார மத்திய நிலைய நிலையத்தின் கீழ் உள்ள கைதடி கிராமிய நிலையம் தில்லானா குழு நடனம் முதலாம் இடத்தையும் வாள் நடனம் இரண்டாம் இடத்தையும் பெற்று அனைத்து போட்டிகளும் தேசிய மட்டத்துக்கு தெரிவாகியுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கும் இதனை நெறிப்படுத்திய ஆசிரியர்களுக்கும் மாணவர்களை ஊக்கப்படுத்திய பெற்றோருக்கும் நிலைய பொறுப்பதிகாரியும் உத்தியோகத்தர்களும் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.





# இந்திய இராணுவத்தால் யாழ். போதனா வைத்தியசாலையில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளது நினைவேந்தல் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்றது



யாழ். போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினரின் படுகொலை செய்யப்பட்ட உறவுகளது 37வது ஆண்டு நினைவேந்தல் 20-10-2024 அன்றையதினம், வைத்தியசாலைக்கு முன்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன்போது உயிர்நீத்தவர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் படுகொலை செய்யப்பட்ட மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள், பொதுமக்களின் உறவுகள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் கலந்துகொண்டனர்.



# தமிழரசு கட்சி தனிநபரின் கம்பனியாக மாறிவிட்டது என சட்டத்தரணி கே.வி.தவராசா ஆவேசம்

ஜனநாயக தமிழரச கூட்டமைப்பு எனும் பெயரில் ஒரு கட்சியை உருவாக்கி நாங்கள் உங்களிடம் வாக்கு கேட்டு வர வேண்டிய சூழ்நிலையை இலங்கை தமிழரசு கட்சி ஏற்படுத்தியிருக்கின்றது. நாங்கள் விரும்பி வெளியில் வரவில்லை என ஜனநாயக தமிழரசு கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

21-10-2024 அன்றைய தினம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் மண்டபத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவரை இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

16 ஆண்டுகள் தமிழரசு கட்சியின் உள்ளே இருந்தேன். இதன்போது மத்திய குழு, அரசியல் குழு மற்றும் சட்டக் குழுவின் பல குழுக்களில் இருந்தேன். கட்சிக்கு வரும் வழக்குகளுக்கும் நான் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தேன். அரசியல் கைதிகளான குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரது வழக்குகளில் இருந்து இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட, அரசியல் கைதிகளின் வழக்குகளில் நான் ஆஜராகி உள்ளேன். நான் வாதாடிய வழக்குகளில் எவருமே சிறை செல்லவில்லை.

இலங்கை தமிழரசு கட்சியானது தற்போது ஒரு தனி நபருடைய கம்பனியாக மாறி இருக்கின்றது. அந்த நபர் இவ்வாறு சர்வதிகாரம் மிக்க நிலையில் செயல்படுவதற்காக தலைமைத்துவமும், சம்பந்தரும் காரணமாக உள்ளனர். கட்சிக்குள் இருந்த அனைவரையும் விலக்கிவிட்டு தனது தனியான கட்டுக்கோப்புக்குள் கட்சியை வைத்திருக்கின்றார்.

கட்சியின் தலைவர் தேர்தலில் சிறீதரன் அவர்கள் வெற்றி பெற்றிருந்தார். இருந்தாலும் அவருக்கான பதவி வழங்கப்படாது, நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்றது.

தமிழ் தேசியம் தான் எமது தமிழரசு கட்சியின் தாரகை மந்திரம். தமிழ் தேசியமானது பாதுகாக்கப்பட வேண்டும். நாங்கள் இல்லாவிட்டாலும் கூட அடுத்த தலைமுறையிடம் அதனை ஒப்படைத்துவிட்டு செல்ல வேண்டும். ஆனால் தமிழரசு கட்சிக்குள் அது நடைபெறவில்லை.



கட்சிக்குள் இத்தனை பேர் இருந்தும் ஏன் எதனையும் செய்யவில்லை என நீங்கள் கேட்க கூடும். கட்சிக்குள் இருந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதவிகளுக்கான ஆசைகளில் இருந்தார்கள். மாகாண சபை தேர்தல் வந்தால் அந்த தேர்தலில் முதலமைச்சர் யார், அமைச்சர்கள் யார், பிரதேச சபை தேர்தல்களில் போட்டியிடுபவர்கள் யார் என அவர்களுக்கு பதவி வழங்கப்பட்டு விட்ட நிலையில் அவர்கள் அனைவரும் அமைதியாகி விட்டார்கள். இவ்வாறான சூழ்நிலையில் தான் கட்சியை நடத்த முடியாது என நான் வெளியேறி வந்தேன்.

நான் ஆறாம் திகதி கட்சியை விட்டு வெளியேறி வந்த பின்னர் பலர் என்னிடம் கேட்டார்கள் ஏன் கட்சியை விட்டு வெளியேறினீர்கள், கட்சிக்கு உள்ளே இருந்து சரிசெய்திருக்கலாம் தானே என்று. எட்டாம் திகதி தலைவர், தான் வகித்த சகல பதவிகளிலும் இருந்து விகுகின்றார். இது ஒருவருடைய சர்வாதிகாரப் போக்கை காட்டுகின்றது.

கட்சியின் செயலாளர் பதவியினை சுமந்திரன் கோரினார். ஆனால் அவருக்கான பலவி மறுக்கப்பட்டது. இதன் போது சுமந்திரன் அவர்கள் நாங்கள் இரண்டு அணி என கூறினார். இப்போது தேர்தல் வரும் பது நாங்கள் ஒரு அணி என கூறுகின்றார். வீட்டுக்குள் என்ன நடக்கின்றது. என்றார் சட்டத்தரணி கே.வி. தவராசா.

உலக செய்திகள்
World News

# மணப்பெண் அலங்காரத்தில் சர்வதேச நாடுகளை தோற்கடித்து மூன்றாவது இடத்தை பெற்றுக் கொண்ட யாழ்ப்பாணப் பெண்மணி அனித்தா!




கம்போடியாவில் நடைபெற்ற மணப்பெண் அலங்கார போட்டியில் 19 நாடுகளுடன் போட்டியிட்டு, யாழ்ப்பாணத்தை சேர்ந்த அனித்தா விநயகாந்தன் அவர்கள் மூன்றாவது இடத்தினை பெற்றுக் கொண்டுள்ளார்.

APHCA Cambodia Hair, Make-up & Beauty Olympics 2024 போட்டிகள் வருடாவருடம் ஒவ்வொரு நாட்டிலும் நடைபெறுவது வழமை. அந்தவகையில் இந்த போட்டியானது இந்த வருடம் கம்போடியாவில் நடைபெற்றது.

எல்லாமாக 19 நாடுகளை சேர்ந்த போட்டியாளர்கள் பங்கு பற்றினார்கள். அந்த வகையில் இலங்கையைச் சேர்ந்த 7 போட்டியாளர்கள் பங்கு பற்றினார்கள்.

அங்கு நடைபெற்ற மணப்பெண் அலங்காரப் போட்டியில் இலங்கை - யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையைச் சேர்ந்த அனித்தா விநயகாந்தன் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவ்வாறு வெற்றியீட்டிய பெண்மணிக்கு பலரும் தமது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கனகராசா சரவணன்

# "மட்டக்களப்பில் கொலை ஊழல் மோசடியில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர்கள் எந்த நேரமும் கைது செய்யப்படுவார்கள்"

## சுயேச்சை வேட்பாளர் விமலசேன லவக்குமார்



மட்டக்களப்பில் கடந்த காலத்தில் அமைச்சர்களாக இருந்து இலஞ்சம், கொலைகள், ஊழல் மோசடி உட்பட பவிதமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளவர்கள் எப்போது எந்த நேரமும் கைது செய்யப்படுவார் என்ற சூழல் உள்ளது எனவே மக்கள் வாக்களிக்கும் போது சிந்திக்க வேண்டும் என சுயேச்சைக்குழு 2 இலக்கத்தில் முந்திரிகைப்பழம் சின்னத்தில் தலைமை வேட்பாளராக போட்டியிடும் வடகிழக்கு முன்னேற்ற கழக தலைவரும் சமூக செயற்பட்டாளருமான வி.லவக்குமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கிரானிலுள்ள அவரது வீட்டில் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுயேச்சைக்குழு 2 மாற்றத்தை நோக்கிய பயணத்தில் மாவட்டத்தில் சமூகத்தில் மாற்றத்தை கொண்டுவரவேண்டும் என்ற ரீதியில் செயற்படுகின்றோம். இருந்தபோதும் ஜனாதிபதி தேர்தலில் சங்கு சின்னத்தை எடுத்து அது தமிழருக்கு உரிய பொதுவான சின்னமாக அறிவித்து அந்த சின்னத்தில் கடந்த காலத்தில் பொது வேட்பாளரை நிறுத்தி போட்டியிட்டனர்.

இதன் பின்னர் நாடாளுமன்ற தேர்தல் அறிவித்த பின்னர் குத்துவிளக்கு சின்னத்தில் போட்டியிட்டவர்கள் குத்துவிளக்கை புறம்தள்ளி சங்கு சின்னத்தை எடுத்து போட்டியிடுகின்றனர் ஜனாதிபதி தேர்தலில் சங்கு சின்னத்துக்கு அதிக-படியான வாக்குகள் வீழ்ந்தபடியால் அந்த வாக்குககளை கபடகரமாக பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற நோக்கோடு இந்த சின்னத்தை எடுத்துள்ளனர்.

அவ்வாறே கடந்தகாலத்தில் இலஞ்சம் கொலைகள், ஊழல் மோசடிகள் உட்பட பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட் அமைச்சர்கள் எப்போதும் கைது செய்யப்படுவார்கள் எனவே இதனை மக்கள் சிந்திக்கவேண்டும் நாங்கள் தமிழ் உணர்வேடு தமிழர்களாக தமிழ் தேசிய நிலப்பரப்பிலே இன்றும் மக்களோடு மக்களாக நின்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

நாங்கள் ஒரு அரசியல் கட்சி சார்ந்தவர்களாக இருக்கவில்லை இருந்தபோதும் சுயேச்சைக் குழுவாக போட்டியிட நாங்கள் எடுத்து முடிவல்ல பிரே-தச மக்கள் இளைஞர்கள், கிராம மக்கள் நீங்கள் உரிமைக்காக போராடுகின்ற போது நீங்கள் எங்களுக்காக வரவேண்டும் என மக்கள் எடுத்த முடிவு.

இதனடிப்படையில் மாவட்டத்திலுள்ள மக்களின் கல்வி வளத்தை மேம்படுத்துவது எமது நோக்கம் அத்துடன் மிகவும் கஸ்டமான சூழ்நிலையில் பல்கலைகழக படிப்பை மேற்கொள்ளமுடியாத உள்ள பிள்ளைகளின் மேற்படிப்புக்கான நிதி உதவிகளை செய்து கொடுப்பது மக்களின் அடிப்படை சுகாதார வசதியான மலசல கூடம் இல்லாத மக்களுக்கு தமிழ் உறவுகளுக்கு ஊடாக அதனை அமைத்துக் கொடுப்போம்.

அதேவேளை எங்கள் சுயேச்சைக்குழுவில் பட்டிருப்பு தொகுதியில் போட்டியிடுகின்ற வெல்லாவெளியைச் சேர்ந்த வேட்பாளரை அரச புலனாய்வாளர்கள் அழைத்து விசாரித்துள்ளனர் நாங்கள் ஜனநாயகவழியில் உரிமைகளுக்காக போகின்ற போதும் அரச புலனாய்வாளர்கள் விசாரணை நடாத்திக் கொண்டிருக்கின்றனர்.

அதேவேளை குத்துவிளக்கில் இருந்தவர்கள் சங்கு என முகங்களை மாற்றிக் கொண்டு வருகின்றனர் எனவே அவதானமாக செயற்பட்டு உண்மையாக வருகின்ற சுயேச்சைக்குழுவாகிய 2 இலக்கத்தில் முந்திரிகைபழ சின்னமான எங்களுக்கு வாக்களியுங்கள் மாற்றத்தை கொண்டுவருவோம் என்றார்.

# தமிழர கட்சியில் இருந்து வெளியேறியவர்களால் வீடு சுத்தமாக வரும்

## மாநகரசபை முன்னாள் மேயரும் வேட்பாளருமான தியாகராசா சரவணபவன்




தமிழரசு கட்சியின் எந்த நிகழ்விலும் பா. அரியேந்திரன் பங்கு கொள்ள கூடாது என கட்சி தீர்மானம் இருக்கின்றபோது அவர் சிறினேசனுக்கு ஆதரவாக பிரச்சாரத்தில் ஈடுபடுவது தீர்மானத்தை மீறிய செயல் அதேவேளை தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்து சென்றவர்கள் பதவிகளுக்கு இருப்பவர்களுக்கு எமது கட்சியில் இடம் இல்லை வெளியேறியவர்கள் வெளியேறட்டும் வீடு மிக சுத்தமாக வரும் என மட்டக்களப்பு மாநகரசபை முன்னாள் மேஜரும் வேட்பாளருமான தியாகராசா சரவணபவன் தெரிவித்தார்.

தமிழர கட்சியின் வீட்டுச்சின்னத்தில் 7ம் இலக்கத்தில் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் மேஜரின் கல்லடியிலுள்ள காரியாலயத்தில் 21ம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகமாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலத்தில் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வராக என்னை தெரிவு செய்வதற்கு என்னை ஒரு வட்டார உறுப்பினராக தெரிவு செய்த கல்லடி வாழ் மக்களுக்கு முதலில நான் நன்றியை தெரிவித்துக் கொள்ளவதோடு மாநகர சபை முதல்வராக தெரிவு செய்வதற்கு துணையாக நின்ற மாநகர சபை வட்டார உறுப்பினர்களுக்கும் தலைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பான நாங்கள் மாநகரசபை ஆட்சியை கைப்பற்றி கடந்த ஐந்து வருட காலமாக நகர்வாள் மக்களுக்கு வினைத்திறன் ஆனதுமான மிகத் திறமையான ஆளுமையைச் செய்து 500க்கும் மேற்பட்ட வீ-திகள் புனரமைக்கப்பட்டு தேவையான அளவு வடிகான்கள் புனரமைக்கப்பட்டு தெற்காசியாவிலேயே முதலாவதும் இலங்கையிலே முதலாவது சிறுவர் சிநேகி அபிவிருத்தி செயல்பாடு மாவட்டத்திலே நான் அறிமுகப்படுத்தி இருந்தேன். அதன் மூலமாக எனது செயல்பாடுகள் உலகளாவு ரீதியிலே விரிவுபடுத்தப்பட்டிருந்தது.

அதேபோல எமது ஆட்சி காலத்தில் பல அபிவிருத்தி சேவைகளை வழங்கி இருந்தோம் குறிப்பாக அரசாங்க அரச நிதியை மட்டும் நம்பி இருக்காமல் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிதிகளைக் கொண்டு பல செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

அதேவேளை உயிர்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொரோனா தொற்றில் இருந்து மக்களை பாதுகாத்ததோடு அமைக்கப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்ட சடலம் எரிக்கும் நிலையத்தை புதிப்பித்து திறந்தோம் இதன் மூலம் மக்களுக்கு இலகுவாக தமது மரண செயற்பாடுகளை செய்யக் கூடியதாக இருந்தது.

அவ்வாறே அடைக்கப்பட்டிருந்த வடிகான்களை அனைத்தையும் முன்னாள் ஆளுநரின் உதவியோடு சுத்தம் செய்து துப்புரவு செய்து இருந்தோம். இவ்வாறு இந்த ஐந்து வருட காலத்தில் மட்டக்களப்பு மாநகர சபை தமது சேவையை சிறப்பாக செய்திருந்தது. இப்படி எனக்கு மட்டக்களப்பு மாநகரத்தில் கிடைத்த அதி-காரம் மட்டக்களப்பு மாவட்டம் முழுதாக கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நான் இந்த பாராளுமன்ற தேர்தலிலே போட்டியிடுகின்றேன்.

இந்தத் தேர்தலிலே இளம் தலைமுறையினருக்கு முன்னுரிமைப்படுத்தி களமிறக்கியுள்ளோம் கட்சசியை விட்டு வெளியேறி போனவர்கள் தேர்தலிகளில் போட்டியிட்டு தொற்றுப் போனவர்கள் திரும்பதிரும்ப ஒரே நபர்களுக்கு ஆசனம் வழங்கமுடியாது பதவிகளுக்கு இருப்பவர்களுக்கு எமது கட்சியில் இடம் இல்லை வெளியேறியவர்கள் வெளியேறட்டும் வீடு மிக சுத்தமாக வரும்

தமிழரசு கட்சி கட்டுக்கோப்பை இழந்து செயற்பட முடியாது அவர் கட்சி கட்டுக்கோப்பில் இருந்து செயற்பட்ட காரணத்தினால் அவருக்கு எதிராக ஒழுக்க காற்று நடவடிக்கை மூலம் தீர்மானம் எடுக்கப்பட்டு கட்சியினால் அரியேந்திரனுக்கு விசாரணை கோரப்பட்டுள்ள நிலையில் சிறிநேசனுக்கு ஆதரவு தெரிவித்து பிரச்சாரத்தில் ஈடுபடுவது பிழையான செயற்பாடு இது தொடர்பாக மத்தியகுழு கூட்டத்தில் ஆராயப்படும்.

அரசாங்கத்தால் தமிழ் தேசியத்துக்கு எதிராக அமுல்படுத்தப்படுகின்ற எந்த செயற்பாட்டிற்கும் ஆதரவு வழங்கமாட்டோம் அதேவேளை நாட்டின் நன்மைக்காக அமுல்படுத்தப்படும் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவோம்.

தமிழ்த் தேசிய சிந்தனையில் இருக்கின்ற நாங்கள் தொடர்ச்சியாக எமது மக்களை பாதுகாப்பதோடு வீட்டு சின்னத்துக்கு வாக்களித்து ஏழாம் இலக்கமான எனக்கும் வாக்களிக்குமாறு அன்பான தமிழ் மக்களை கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

# நீதிபதிக்கு சேறு பூசும் சுவரொட்டி தொடர்பாக முன்னாள் நா.உ.ஸ்ரீரங்காவை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு

நீதிபதிக்கு சேறு பூசும் சுவரொட்டிகளுடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்காவுக்கு தொடர்பு இருக்குமாயின், அவரை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துமாறு, கொழும்பு பிரதம நீதவான் திலின கமகே, 21ம் திகதி திங்கட்கிழமை கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி மொஹம்மட் மிஹாலுக்கு எதிராக, சேறு பூசும் வகையிலான சுவரொட்டிகள் கொழும்பில் ஒட்டப்பட்டிருந்தமை தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவரை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்படவரிடம் பொலிசார் மேற்கொண்ட விசாரணையில் இந்த சுவரொட்டிகளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்கா ஒட்டுமாறு கூறியதுக்கமைய ஒட்டியுள்ளதாக அவர், பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.

இதனை தொடர்ந்து குறித்த வழக்கை கொழும்பு பிரதம நீதவான் திலின கமகே விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போது குற்றப்புலனாய்வு பொலிஸார நீதிமன்ற உத்தரவின் பேரில் ரங்காவை கைது செய்ய கொழும்பிலுள்ள ரங்காவின் வீட்டுக்கு சென்றபோதும் அங்கு அவர் இருக்கவில்லை என முன்னிலையில் முன்வைத்ததையடுத்து உடனடியாக அவரை தேடிக்கண்டுபிடித்து மன்றில் ஆஜர் செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.


Plan
Design
Build
Paramount
Custom Homes Ltd.
Quality comes first
Build your Dream Home With Us
RESIDENTIAL / COMMERCIAL CONSTRUCTION
ARCHITECTURAL DRAWINGS
OBTAINING BUILDING PERMITS
REZONING
LAND SEVERANCE
FINANCING FOR CONSTRUCTION
EXPERIENCE - 10 + YEARS
Check out our showroom at 2400 MIDLAND AVE. UNIT 106
TORONTO, ON. M1S 5C1
416-335-5885
TARION CERTIFIED BUILDER
REGISTERED BUILDER
TARION
TARION WARRANTY CORPORATION


அச்சு ஊடகங்கள் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொண்டு கனடாவில் தொடர்ச்சியாக வெளிவரும்
UTHAYAN உதயன்
உதயன் பத்திரிகையின்
28வது ஆண்டு பல்சுவைக் கலைவிழாவும்
நிதி சேர் இராப்போசன விருந்தும்
DEC. 14th 2024
Toronto Voice Of Humanity
சிறப்பு சொற்பொழிவாளராக,
திரைப்பட இயக்குனரும், தொலைகாட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளருமாகிய,
கரு பழனியப்பன் கலந்து கொள்கின்றார்
அத்துடன் இசை, மற்றும் நடனங்கள்
தமிழா தமிழா
இடம்:- Kennedy Convention Centre
1199 Kennedy Road, Scarborough
(Near Lawrence Ave),
காலம்:- 14-12-2024 சனிக்கிழமை -6.00 PM
Tickets:- 416 732 1608 or 647 762 9512


இனிய தீபாவளி வாழ்த்துகள்
Oct. 31, 2024
எங்கும் ஒளி மிளிர, என்றும் நம்பிக்கை மலர,
இந்த தீபாவளியை அனைவரும் இணைந்து
இனிதே கொண்டாடுவோம்.
LOGAN KANAPATHI - MPP, MARKHAM-THORNHILL
Visit Us: 7380 McCowan Rd, Unit 3, Markham
Tel: 905 - 305 - 1935 | E-mail: logan,kanapathico@pc.ola.org
Logan Kanapathi LoganKanapathi Logan_Kanapathi logankanapathi


AQUA WELLNESS CENTRE LIMITED
REHABILITATION CLINIC

# INJURED?

CALL US TODAY
OVER 15 YEARS OF EXPERIENCE IN PERSONAL INJURY.

- EXTENDED HEALTH CARE ( DIRECT BILLING )

- WSIB
- SLIP & FALL
- PRIVATE CLIENTS
- SPORTS INJURY
- MOTOR VEHICLE ACCIDENT





KENEDY AND SHEPPARD AVE. E
OFF KENNEDY ROAD.

AQUA WELLNESS CENTRE LTD.
100 COWDRAY COURT SUIT 140
TORONTO, ON. M1S 5C8

T: 416-463-9090 C: 647-972-7126
F: 416-363-9090


என்றென்றும் உங்கள் இல்லங்களிலும்,
உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்க
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!


Happy Diwali
ONTARIO
Aris Babikian
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT
Constituency Office:
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
Tel: 416-297-6568 Email: aris.babikianco@pc.ola.org




# அநுரவின் ஒரு மாத ஆட்சியில் நடந்தது என்ன?

**“ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மீதான மக்களின் நம்பிக்கை, எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையிலான நடவடிக்கைகள், கைதுகள், வழக்குகள், அதிரடி ஆட்டங்களுக்கான “அறிகுறிகள்” இந்த ஒரு மாத கால அநுரகுமார திசாநாயக்கவின் ஆட்சியில் வெளிப்பட்டுள்ளதா? ஊழல்வாதிகள், மோசடிக் காரர்கள், குற்றவாளிகள், வர்த்தக மாபியாக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் அவர் ஜனாதிபதியாக மக்கள் மனதை வென்றுள்ளாரா? மக்கள் அவரின் ஒரு மாத கால ஆட்சியில் திருப்தியடைந்துள்ளனரா?”**

**- கே. பாலா**

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக மக்கள் விடுதலை முன்னணி (ஜே .வி.பி.), தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி.) ஆகிய கட்சிகளின் தலைவரான அநுர குமார திசாநாயக்க பதவியேற்று கடந்த 23 ஆம் திகதியுடன் ஒரு மாதம் நிறைவடைந்துள்ளது. மக்களின் பெரும் எதிர் பார்ப்புகள், நம்பிக்கைகள் மத்தியிலும் மக்களின் 2ஆவது “அரகலய” புரட்சி மூலமும் 56,34,915 நேரடி வாக்குகள், 1,05,264 விருப்பு வாக்குகள் என்ற அடிப்படையில் 57,40,179 மொத்த வாக்குகளைப் பெற்றே ஜனாதிபதிக் கதிரையை வெற்றி கொண்டுள்ளார்.

அநுரகுமார திசாநாயக்கவின் இந்த புரட்சிகர வெற்றிக்கு நாட்டில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள், உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல், ராஜபக்ச குடும்பத்தின் ஆட்சி அராஜகங்கள் அவலங்கள், பொருளாதார நெருக்கடிகள், வாழ்க்கைச் சுமை அதிகரிப்புக்களுக்கு அப்பால் மக்கள் ஒரு மாற்றத்தை விரும்பியதுடன் அநுரகுமார திசாநாயக்க என்ற ஒரு தனிப்பட்ட தலைவர் மீதும் அவரது ஆக்ரோஷமான உரைகள் மீதும் வைத்த நம்பிக்கையின் வெளிப்பாடும் எதிர்பார்ப்பும் ஒரு தூய்மையான ஆட்சி ஏற்பட வேண்டுமென்ற விருப்புமே அவரின் வெற்றிக்கு காரணங்களாகவுள்ளன.

அதனால் தான் கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்சவையும் சஜித் பிரேமதாசவையும் எதிர்த்து போட்டியிட்டு வெறுமனே 4,18,553 வாக்குகளைப்பெற்று கட்டுப்பணத்தையும் இழந்த அநுரகுமார திசாநாயக்கவுக்குத் தான் இம்முறை பலம் வாய்ந்த ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச ஆகியோரை தோற்கடித்து 56,34,915 நேரடி வாக்குகளை அளித்து “நம்பிக்கை”, “எதிர்பார்ப்பு” அடிப்படையில் ஜனாதிபதியாக்கியுள்ளதுடன் “ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க”வின் ஊழல்வாதிகள், மோசடிக்காரர்கள், குற்றவாளிகள், வர்த்தக மாபியாக்களுக்கு எதிரான அதிரடி ஆட்டத்துக்காக காத்திருக்கின்றனர்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மீதான மக்களின் நம்பிக்கை, எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையிலான நடவடிக்கைகள், காய் நகர்த்தல்கள், கைதுகள், வழக்குகள், அதிரடி ஆட்டங்களுக்கான “அறிகுறிகள்” இந்த ஒரு மாத கால அநுரகுமார திசாநாயக்கவின் ஆட்சியில் வெளிப்பட்டுள்ளதா? அவர் ஜனாதிபதியாக மக்கள் மனதை வென்றுள்ளாரா? மக்கள் அவரின் ஒரு மாத கால ஆட்சியில் திருப்தியடைந்துள்ளனரா என்று பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

அநுர குமார திசாநாயக்க ஜனாதிபதியானவுடன் ராஜபக்ச குடும்பத்தில் சிலர் சிறை செல்வார்கள், உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சூத்திரதாரிகள் அம்பலப்படுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள், மத்தியவங்கி மோசடியாளர்கள் மடக்கப்படுவார்கள், ஊழல், மோசடி அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளினால் சிறைகள் நிரம்பும், வாழ்க்கைச்செலவுகள் குறைவடையும், வளமான வாழ்க்கை வாழமுடியும் என “நம்பிக்கை” வைத்த மக்களின் எதிர்பார்ப்புகளை ஓரளவுக்கேனும் நிறைவேற்றக்கூடிய எந்தவொரு அதிரடி அறிவிப்புக்களும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடமிருந்து இதுவரையில் வெளிவரவில்லை என்பதே உண்மை.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் வெளியிடப்பட்ட விவசாயிகள், மீனவர்களுக்கான மானிய அறிவிப்புக்கள் கூட தேர்தல்கள் திணைக்களத்தினால் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதியாகவிருந்த ரணில் விக்கிரமசிங்கவினால் சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களுடன் செய்து கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கைகளை கடுமையாக விமர்சித்து, அதை வைத்தே ஆட்சிக் கதிரையை கைப்பற்றிய அநுர குமார திசாநாயக்க சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களுடன் ரணில் விக்கிரமசிங்க செய்து கொண்ட கடன் உடன்படிக்கைகளை அச்சுப் பிசகாது தானும் ஏற்றுக் கொண்டு கையொப்பமிட்டு கடன்பெறும் “தவிர்க்கமுடியாத அரசியல்” செய்வது அநுர குமார கொடுத்த வாக்குறுதி மீது மக்கள் வைத்த நம்பிக்கைக்கு, எதிர்பார்ப்புக்கு மாறாகவுள்ளது.

அடுத்ததாக எதிர்க்கட்சியாக அநுரகுமார திசநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி இருந்த போது அரசுக்கு எதிராக முன் வைத்த ஆயிரக்கணக்கான ஊழல். மோசடிக் குற்றச்சாட்டு கோப்புகளில் ஒன்றைக்கூட ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இதுவரையில் தூசுகூடத் தட்ட வில்லை. உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சூத்திரதாரிகளை எமக்குத்தெரியும். நாம் ஆட்சிக்கு வந்தால் எமது முதல் வேட்டை அவர்கள்தான் என சூளுரைத்த அநுரகுமார திசநாயக்க இன்று அது தொடர்பில் மௌனம் காக்கின்ற நிலையில் உயிர்த்த ஞாயிறு தற்கொலைக்குண்டுத்தாக்குதலின் முக்கிய சூத்திரதாரிகள் அநுர குமாரவினால் அண்மையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்ட ரவி செனவிரத்ன, குற்றப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட ஷானி அபேசேகர ஆகியோரே என எதிர்க்கட்சிகள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களை முன்வைத்துள்ளமையும் மக்களை குழப்ப நிலைக்கு தள்ளியுள்ளது.

அத்துடன் ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க பதவியேற்றதுடன் இடம்பெற்ற ஆளுநர்கள் நியமனத்தில் மேல்மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டவர் தொடர்பில் பலவேறு விமர்சனங்களும் எழுந்துள்ள நிலையில் அந்த ஆளுநரை அவர்சார் சமூகத்தினர் கூட கடுமையாக விமர்சிப்பதும் ஜனாதிபதியின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் தொடர்பில் எழுந்துள்ள விமர்சனங்களும் பண முதலைகளுக்கோ தகுதியற்றவர்களுக்கோ அரச நியமனங்கள் வழங்கப்படாது என அநுரகுமார திசாநாயக்க வழங்கிய உறுதி மொழியையும் அதன் மூலம் மக்கள் அவர் மீது வைத்த நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் கேள்விக்குட்படுத்தியுள்ளது.

அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியானதுடன் இலங்கையில் உள்ள வெளிநாடுகளின் தூதுவர்கள் அவரை சந்திக்க படையெடுத்தனர். இந்த சந்திப்புக்கள் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவினால் வெளியிடப்பட்ட செய்தி அறிக்கைகளில் வெளிநாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதிக்கு தெரிவித்த கருத்துக்களும் வழங்கிய உறுதிமொழிகளும் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தன. எந்தவொரு ஊடக அறிக்கையிலும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்த கருத்துக்கள், வழங்கிய உறுதிமொழிகள் குறிப்பிடப்படாது கவனமாக தவிர்க்கப்பட்டிருந்தன. இது அநுரகுமார அரசு வெளிநாட்டுக் கொள்கையில் வெளிப்படைத்தன்மையற்ற வகையில் இருப்பதை வெளிப்படுத்தியுள்ளது.

அநுர குமார அரசில் மக்கள் பெரும் எதிர் பார்ப்பு வைத்திருந்த விடயம் பொருட்களின் விலை குறைப்பு. வர்த்தக மாபியாக்கள் மற்றும் தரகுப் பணம் பெறுவதை நிறுத்தி அதன் நன்மைகளை மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதாக தேசிய மக்கள் சக்தியினர் தேர்தல் மேடைகளில் வாக்குறுதியளித்தனர். இதுவரை வர்த்தக மாபியாக்களையோ கமிஷன் எடுப்பதையோ அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை. அரசால் பொருட்களின் விலையை குறைக்க முடியாது விட்டாலும் பரவாயில்லை பொருட்களின் விலைகள் அதிகரிக்காமலாவது வைத்திருந்திருக்க வேண்டும். ஆனால் அரசினால் எதுவும் முடியவில்லை. சந்தையில் அரிசி, முட்டை, தேங்காய் உட்பட அத்தியாவசிய பொருட்கள் பலவற்றின் விலைகள் வெகுவாக அதிகரித்துள்ளதுடன் பெரும் தட்டுப்பாடுகளும் ஏற்பட்டுள்ளன. எரிவாயு, மின்சாரம், வரி குறைக்கப்படும் எனக் கூறினாலும் மக்களுக்கு நிவாரணம் கிடைப்பதாக தெரியவில்லை. அதற்கான வேலைத்திட்டமும் இல்லை. இதனால் மக்கள் பெரும் கஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர்.

அநுரகுமார அரசின் இவ்வாறான பலவீனங்கள் ஒட்டு மொத்த நாட்டு மக்களின் கவலையாக இருக்கின்ற நிலையில் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம், தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை, மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அநுரகுமார திசாநாயக்க அரசு கொண்டுள்ள இனவாதப் போக்கும் அவரின் கட்சியினர் வெளிப்படுத்தும் இனவாதக் கருத்துக்களும் தமிழ் மக்கள் அநுரகுமார மீதும் அவரின் ஆட்சி மீதும் வைத்திருந்த நம்பிக்கை எதிர்பார்ப்புகளை இந்த ஒரு மாத காலத்தினுள்ளேயே தவிடு பொடியாக்கியுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மீதும் அவரின் ஆட்சி மீதும் மக்கள் வைத்த “நம்பிக்கை”, “எதிர்பார்ப்பு” வலுவிழந்து சென்றுகொண்டிருக்கும் நிலையில் “ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள அநுரகுமார திசாநாயக்க 2 அமைச்சர்களை வைத்துக்கொண்டு எந்த விதமான காத்திரமான நடவடிக்கைகளையும் தற்போது எடுக்க முடியாது. நடைபெறவுள்ள பாராளுமன்றத்திற்கான தேர்தலில் தனித்து ஆட்சியமைக்கும் அதிகாரத்தை, பலத்தை அநுரகுமார திசாநாயக்கவுக்கு கொடுத்தால்தான் அவர் தான் கொடுத்த அத்தனை வாக்குறுதிகளையும் நிறைவேற்றமுடியும். அதனால்தான் அவர் பாராளுமன்றத் தேர்தல் முடியும்வரை காத்திருக்கின்றார். பாராளுமன்ற பலம் கிடைத்தவுடன் அவரின் ஆட்டம் ஆரம்பமாகும் என அவரின் கட்சியினர் “சாக்குப் போக்கு” கூறத் தொடங்கியுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியினர் கேட்டது போல் ஜனாதிபதி பதவியைக் கொடுத்த மக்கள் பாராளுமன்றத்திலும் பெரும்பான்மைப் பலத்தைக் கொடுத்தால் கூட பெரிதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் எதனையும் சாதித்து விட முடியாது. ஏனெனில் இலங்கை அரசியல் கலாசாரம் அப்படிப்பட்டது. அரசின் ஊழல், மோசடிகள், தவறுகள் குறைபாடுகள், குற்றங்களை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சிப்பதும் பின்னர் தாங்கள் ஆட்சிக்கு வரும்போது முன்னைய அரசு செய்த அதே ஊழல், மோசடிகள், தவறுகள் குறைபாடுகள், குற்றங்களை செய்வதும், கடந்த ஆட்சியில் குற்றங்களை செய்தவர்களை தண்டிக்காமல் விடுவதும் தான் எழுதப்படாத விதியாகவுள்ளது. இந்த விதியை மாற்றுவதென்பது ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு மணலில் கயிறு திரிப்பது போன்றுதான் இருக்கும்.

எதிர்க்கட்சியாக வெளியில் இருந்து ஆட்சியாளரை ஆக்ரோஷமாக விமர்சித்த அநுரகுமார திசநாயக்கவுக்கு தற்போது “ஜனாதிபதி கதிரை ஒரு முள் படுக்கை, ஜனாதிபதி பதவி ஒரு முள் கிரீடம் என்பதும். என்ன பண்ண முடியும், என்ன பண்ண முடியாது என்பதும் ஓரளவுக்காவது புரிந்திருக்கும். அநுரகுமார திசாநாயக்கவுக்கும் ஜனாதிபதியாக இந்தளவுக்கு மட்டும்தான் செய்ய முடியும் என்பதனை அவர் மீது “பெரு நம்பிக்கை”, “எதிர்பார்ப்பு” வைத்த மக்களும் இந்த ஒரு மாத ஆட்சியில் ஓரளவு புரிந்து கொண்டுள்ளனர். மக்கள் தன் மீது வைத்த “நம்பிக்கை” “எதிர்பார்ப்பு”க்களினால் எழுச்சி பெற்று எட்டமுடியாத ஜனாதிபதி கதிரையை எட்டிப்பிடித்த அநுரகுமார திசாநாயக்கவுக்கு மக்களின் அந்த அதீத நம்பிக்கையும் எதிர்பார்ப்புமே சிலவேளைகளில் “வீழ்ச்சி” யை கொடுத்தாலும் கொடுக்கலாம்.



# யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் இளம் வேட்பாளர் ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்ர்

இலங்கை செய்திகள் Sri Lanka News

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் இளம் வேட்பாளர் ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

அங்கஜன் தலைமையிலான ஜனநாயக தேசியக் கூட்டணியில் தபால் பெட்டி சின்னத்தில் போட்டியிடும், வல்வெட்டித்துறை நகரசபை முன்னாள் உறுப்பினரும் உடுப்பிட்டி பகுதியை சேர்ந்தவரான செந்திவேல் தமிழினியன் என்ற வேட்பாளரே உயிரிழந்துள்ளார்.

திடீர் சுகவீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# கைது செய்யப்பெற்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொலிஸ் பிணையில் விடுதலை!



யாழ்ப்பாணம் - வடமராட்சி, நெல்லியடி பகுதியில் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சற்றுமுன்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடி பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நெல்லியடி பொலிஸாரினால் இன்று பிற்பகல் 4:00 மணியளவில் கைது செய்யப்பட்டிருந்தார்.

கட்சி ஆதரவாளர்களுடன் பிரசாரத்தில் ஈடுபட்டபோது குறித்த கைது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தேர்தல் விதிமுறையை மீறி பிரசாரத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் கைது முன்னெடுக்கப்பட்டது.

பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் அளிக்கப்பட்ட பின்னர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதேவேளை பருத்தித்துறையில் பிரசாரத்தில் ஈடுபட்ட தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் வரதராஜன் பார்த்தீபனும் பருத்தித்துறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நிலையில் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

# யாழ்ப்பாணத்தில் 10 வயதுச் சிறுமியை துஷ்பிரயோகம் செய்த 60 வயது நபர்!



யாழ்ப்பாணம் - மருதங்கேணி பகுதியில் தனித்திருந்த 10 வயதுச் சிறுமி ஒருவர் 60 வயது நபரால் கடுமையாக பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், சிறுமியின் பெற்றோர் வெளியே சென்றிருந்த நிலையில் சிறுமி தனியாக வீட்டில் இருந்துள்ளார். இதன்போது அவரது வீட்டுக்கு பின் வீட்டில் வசிக்கும் 60 வயது நபர் ஒருவர் குறித்த சிறுமியை தவறான நடத்தைக்கு உட்படுத்தியுள்ளார்.

இதனை சிறுமி தனது பெற்றோருக்கு தெரியப்படுத்திய நிலையில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

குறித்த நபர் தலை மறைவாகியுள்ளார். இந்நிலையில் மருதங்கேணி பொலிஸாரும், தடயவியல் பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை எழுத்தாளர் பவானி சச்சிதானந்தன் அவர்களின் நூல்கள் வெளியீட்டு விழா






இலங்கை வாழ் எழுத்தாளரும் கனடா உதயன் தமிழ்நாடு இனிய நந்தவனம் உட்பட இலங்கைக்கு வெளியே பல நாடுகளிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகள் பத்திரிகைகளை தனது படைப்புகளால் அலங்கரித்துள்ள பவானி சச்சிதானந்தன் அவர்களின் நூல்கள் வெளியீட்டு விழா எதிர்வரும் 03-11-2024 ஞாயிற்றுக்கிழமை அன்று கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஈழத்து கலை இலக்கிய மற்றும் பத்திரிகைத்துறை சார்ந்த "பிதாமகர்கள்" உட்பட இளைய தலைமுறை எழுத்தாளர்கள் கவிஞர்கள் என பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ள இந்த நூல்கள் வெளியீட்டு விழாவில் "வாழ்க்கை என்பது" என்னும் சிறுகதைத் தொகுதியும் "நதிகளின் ஓட்டம் கடலினிலே" என்னும் கவிதைத் தொகுதியும் வெளியிடப்பெறவுள்ளன.

விழா வெற்றி பெற கனடா உதயன் ஆசிரிய பீடமும் அதன் வாசகர்களும் உலகின் பல பாகங்களிலிருந்தும் வாழ்த்துகின்றனர்

# "தீவகம் தன் வரலாற்றுக் கடமையில் ஒருபோதும் தவறாது" சிறீதரன்

இனவிடுதலைப் போரியல் வரலாற்றிலும், அதன்பின்னரான தமிழ்த்தேசிய அரசியல் பரப்பிலும் தீவக மண்ணும், அதன் மக்களும் வழங்கிவரும் பங்களிப்பு மிகக் கனதியானது என நாடாளுமன்ற மேனாள் உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்கான முதன்மை வேட்பாளராகக் களமிறங்கியிருக்கும் சிறீதரன், தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொள்வதற்காக 24-10-2024 அன்றைய தினம் நெடுந்தீவுக்கு விஜயம் மேற்கொண்டு, மக்களுடன் கலந்துரையாடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தீவக மக்கள் தமிழ்த்தேசிய அரசியற் களத்தில் ஊறித் திளைத்தவர்கள். தமிழ்த்தேசியக் கொள்கையே அவர்களது மாறாத நிலைப்பாடு. எதிர்வரும் தேர்தலிலும் அந்தக் கொள்கைக்கான ஆணையாகவே அவர்கள் தமது வாக்குகளைப் பிரயோகிப்பார்கள். இந்த மண்ணும், மக்களும் ஒருபோதும் விலைபோகமாட்டார்கள் என்றார்.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

கனடிய செய்திகள் Canadian News

# Canada - Sri Lanka Business Convention, hosted by Canada - Sri Lanka Business Council in Scarborough on 15th of October, at Netwyn Place.

## கனடா - இலங்கை வர்த்தக சபை நடத்திய Canada - Sri Lanka Business Convention என்னும் தலைப்பிலான கருத்தரங்கு





கனடா - இலங்கை வர்த்தக சபை நடத்திய Canada - Sri Lanka Business Convention என்னும் தலைப்பிலான கருத்தரங்கும் கலந்துரையாடலும் கடந்த 15-10-2024 அன்று ஸ்காபுரோவில் அமைந்துள்ள Netwyn Place. கூட்ட மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கனடா - இலங்கை வர்த்தக சபையின் தலைவரும் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவருமான குலா செல்லத்துரை அவர்கள் கருத்தரங்கை தொடக்கி வைத்து உரையாற்றினார்.

அவர் தனது உரையில் கனடாவில் வர்த்தகத்துறையில் வளர்ச்சியடைந்துள்ள பல அன்பர்கள் இலங்கையில் முதலீடுகளை செய்ய விரும்புகின்ற வகையில் அவர்கள் தங்கள் தாய்நாட்டிற்கும் தங்கள் பொருளாதார ஆதரவை தருவதற்கு விரும்புகின்றார்கள். எனவே எமது கனடா - இலங்கை வர்த்தக சபையானது அதற்குரிய இணைப்புப் பாலமாக விளங்குவதற்கு தீர்மானித்தது.

அதன் ஒரு அங்கமாகவே இன்றைய இலங்கை - கனடா வர்த்தக முயற்சிகளுக்கான கலந்துரையாடல் இடம்பெறுகின்றது.எனவே நாம் அதனை வரவேற்று எமது எதிர்காலத்தை சுபீட்சம் நிறைந்ததாக அமைப்போம் என்றார்.

தொடர்ந்து இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் சார்பில் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த இரண்டு பிரதிநிதிகள் அங்கு உரையாற்றினார்கள். அவர்களது உரைகள் பயனுள்ளதாக இருந்தன.

கனடா வாழ் வர்த்தக அன்பர்களும் தங்கள் கேள்விகளையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டதன் மூலம் அன்றைய நிகழ்வை பயனுள்ளதாக்கினார்கள்.

இங்கு காணப்படுகின்ற படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும். படங்களில் கனடா - இலங்கை வர்த்தக சபையின் முக்கிய உறுப்பினர்களும் காணப்படுகின்றார்கள்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

## "வடக்கு மாகாணத்தில் கனிம வளம் கொள்ளை" என மாகாண ஆளுநர் அமெரிக்கா தூதரிடம் தெரிவிப்பு

- நடராசா லோகதயாளன்



வடக்கு மாகாணத்தின் பல பிரதேசத்திலும் கனிய வளங்கள் திட்டமிடப்பட்ட வகையில் அரசியல்வாதிகளால் சூறையாடப்படுகின்றது என அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிடம் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் (Julie Chung) 22-10-2024 அன்று வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே வடக்கு மாகாண ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

இச் சந்திப்பில் அபிவிருத்தி செயற்பாடுகள், கல்வி, சுற்றுலாத்துறை, காணி விடுவிப்பு, போக்குவரத்து வசதிகள், தொழில் வாய்ப்புகள், முதலீட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது. அமெரிக்க தூதுவர் காணி விடுவிப்பு தொடர்பான விபரங்களை தூதுவர் ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார்.

ஜனாதிபதியின் வழிகாட்டுதல்களுக்கு அமைய காணி விடுவிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன. வடக்கு மாகாணத்தில் காணி சம்பந்தப்பட்ட பிணக்குகள் சட்டவிரோத காணி ஆக்கிரமிப்புகள் பாரியளவில் காணப்படுகின்றன எனவும் அவற்றை தீர்ப்பதற்கு தற்போது உள்ள அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து சாதகமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வடக்கில் காணப்படும் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இதேநேரம் வடக்கில் உள்ள முக்கிய பிரச்சணையாகவும் இயற்கை பாதுகாப்பாகவும. காணப்படும் கனிய வளங்கள் வடக்கு மாகாணத்தின் பல பிரதேசத்திலும் திட்டமிட்டு அரசியல்வாதிகளால் சூறையாடப்படுகின்றது என ஆளுநர் சுட்டிக் காட்டினார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவரிடம் ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

இதன்போது இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் வடக்கு மாகாண அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்க அமெரிக்கா தயாராக உள்ளதாக தெரிவித்ததுடன் இதற்கு ஆளுநரிடமிருந்தும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.



## தீபஒளித் திருநாள் (நிலைமண்டில ஆசிரியப்பா)

---

*தீபஒளித் திருநாள் தித்திக்கும் பெருநாள்*
*பாபங்கள் நீங்கிய புனித நன்நாள்*
*கோபங்கள் தொலையக் குளிர்ந்த நீராடி*
*தீபங்கள் ஏற்றியே திருப்தி கொண்டோம்*
*புத்துடை அணிந்து பூரிப்புப் பெற்றோம்*
*மத்தாப்புக் கொளுத்தி மகிழ்ச்சியும் அடைந்தோம்*
*கோவில் சென்று கோவிந்தனைத் தொழுது*
*மாவிளக் கேற்றி மனநிறைவு கொண்டோம்*
*பட்சணம் செய்து பகிர்ந்து உண்டோம்*
*விட்ட உறவுடன் விரும்பி இணைந்தோம்*
*சொந்தம் எல்லாம் சோதரராய்க் கூடியே!*
*சந்தோசம் மிகிந்திட சரசம் செய்தோம்*
*விருப்புடன் உணவுகள் வீட்டில் செய்தே!*
*விருந்தினர் அழைத்து விருந்து கொடுத்தோம்*
*பாட்டுப் பாடியும் பகடிகள் சொல்லியும்*
*ஆட்டம் போட்டும் ஆனந்தம் கொண்டோம்*
*சிறுவர்கள் சேர்ந்தே சீனவெடி வெடித்தனர்*
*சிறுமிகள் கூடியே சடுகுடு ஆடினர்*
*பல்லிலாப் பாட்டன் பாட்டிகள் எல்லாம்*
*செல்லக் கதையுடன் சிரித்து மகிழ்ந்தனர்*
*எப்போது வருமென ஏங்கும் இந்நாள்*
*இப்போ நினைத்தால் இதயம் இனிக்குதே!*
*வருடம் ஒருநாள் வந்திடும் திருநாள்*
*விருப்பொடு நாமெலாம் விசாகமாய் போற்றுமே!.*

*விகாசம் – – – – – –முகமலர்ச்சி*

---

***ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்***
***(416) 844-7453***


LUNAR
MOTION PICTURES
October 27 – SUN – 1:00 pm
woodside cinemas
Woodside Cinema (Special Screening)
ஆக்குவாய் காப்பாய்
Written & Directed by
MATHIVASAN
Line Producer
MUTHUKUMAR
QUBE
DOP THEEPAN RAJALINGAM - JEEVANRAM JEYAM Music RIJU KRISHNA Editor VICKY - MUHAN Story SAGAPTHAN
Technical Director P T CHANDRA KANTH DI BEBIN Publicity Designer KAMBAM SHANKAR

THE TAMIL MIRROR October 15, 2024

TM தமிழ் மிரர் Tamil Mirror
YOUR BUSINESS FOR GROWTH..
MIRROR THAT REFLECTS THE TAMIL COMMUNITY

You're Welcome

# 19 வது ஆண்டு விழா

## 19th year celebrations



Prof. V. Sangara Narayanan Chief Guest
முனைவர் வே. சங்கர நாராயணன்







# விருது விழா

## Awards Gala

3 வது முப்பாட்டன் முருகன் விழா

3rd Muppattan Murugan Vizha



NOVEMBER 03 2024
Sunday
4.30 pm

Chinese Cultural Centre,
5183 Sheppard Ave East. Tel: 416-697-0126

# அன்பின் தொனி - 790

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

தேவகிருபை - Grace of God

**என்றும் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன்.**

கர்த்தர் சொல்லுகிறார்: நீங்கள் நியாயத்தைக் கைக்கொண்டு, நீதியைச் செய்யுங்கள் என் இரட்சிப்பு வரவும், என் நீதி வெளிப்படவும் சமீபமாயிருக்கிறது. இப்படிச் செய்கிற மனுஷனும், இதைப் பற்றிக்கொண்டிருந்து, ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடி ஆசரி த்து, ஒரு பொல்லாப்பையும் செய்யாதபடி தன் கையைக் காத்துக்கொண்டிருக்கிற மனுபுத்திரனும் பாக்கியவான். கர்த்தரைச் சேர்ந்த அந்நியபுத்திரன்: கர்த்தர் என்னைத் தம்முடைய ஜனத்தைவிட்டு முற்றிலும் பிரித்துப்போடுவாரென்று சொல்லானாக; அண்ணகனும், இதோ, நான் பட்டமரமென்று சொல்லானாக. என் ஓய்வுநாட்களை ஆசரித்து, எனக்கு இஷ்டமானவை கைளைத் தெரிந்துகொண்டு உடன்படிக்கையைப் பறறிக்கொள்ளுகிற அண்ணகர்களைக் குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் அவர்களுக்கு என் ஆலயத்திலும், என் மதில்களுக்குள்ளும் குமாரருக்கும் குமாரத்திகளுக்குமுரிய இடத்தையும் கீர்த்தியையும் பார்க்கிலும், உத்தம இடத்தையும் கீர்த்தியையும் கொடுப்பேன், என்றும் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன். கர்த்தரைச் சேவிக்கவும், கர்த்தருடைய நாமத்தை நேசிக்கவும் அவருக்கு ஊழியக்காரராயிருக்கவும், அவரைச் சேர்ந்து, ஓய்வுநாளைப் பரிசுத் தக்குலைச்சலாக்காதபடி ஆசரித்து என் உடன்படிக்கையைப் பற்றிக்கொண்டிருக்கிற அந்நியபுத்திரர் அனைவரையும். **- ஏசாயா 56: 1-6**

**என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்.**

நான் என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவந்து: என் ஜெபவீட்டிலே அவர்களை மகிழப் பண்ணுவேன்; அவர்களுடைய சர்வாங்கதகனங்களும், அவர்களுடைய பலிகளும், என் பலி பீடத்தின்மேல் அங்கிகரிக்கப்பட்டிருக்கும்; என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும். இஸ்ரவேலில் தள்ளுண்டவர்களைச் சேர்க்கிற கர்த்தராகிய ஆண்டவர்: அவனிடத்தில் சேர்க்கப்பட்டவர்களையல்லாமல் இன்னும் அவனிடத்தில் சேர்ப்பேன் என்கிறார். வெளியில் சஞ்சரிக்கிற சகல மிருகங்களே, காட்டிலுள்ள சகல மிருகங்களே, பட்சிக்க வாருங்கள். அவனுடைய காவற்காரர் எல்லாரும் ஒன்றும் அறியாத குருடர்; அவர்களெல்லாரும் குலைக்கமாட்டாத ஊமையான நாய்கள்; தூக்கமயக்கமாய்ப் புலம்புகிறவர்கள், படுத்துக் கொள்ளுகிறவர்கள், நித்திரைப் பிரியர்; திருப்தியடையாமலிருக்கும் பெருவயிற்று நாய்கள்; பகுத்தறிவில்லாத மேய்ப்பர்; அவர்களில் ஒவ்வொருவனும் தன் தன் வழியையும் அவனவன் தன் தன் மூலையிலிருந்து தன் தன் பொழிவையும் நோக்கிக்கொண்டிருக்கிறான். வாருங்கள், திராட்சரசத்தைக் கொண்டுவருவேன், மதுவைக் குடிப்போம்; நாளையத்தினம் இன்றையத்தினம்போலவும், இதற்கு அதிகமாகவும் இருக்கும் என்பார்கள். **- ஏசாயா 56: 7-12**

**நீங்கள் துரோகம்பண்ணுகிற பிள்ளைகளும், கள்ளச் சந்ததியாருமல்லவோ?**

நீதிமான் மடிந்துபோகிறான், ஒருவரும் அதை மனதில் வைக்கிறதில்லை; புத்திமான்கள் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள், ஆனாலும் தீங்குவராததற்குமுன்னே நீதிமான் எடுத்துக் கொள்ளப்படுகிறான் என்பதைச் சிந்திப்பார் இல்லை. நேர்மையாய் நடந்தவர்கள் சமாதா னத்துக்குள் பிரவேசித்து தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள். நாள்பார்க்கிறவளின் பிள்ளைகளே, விபசாரனுக்கும் வேசிக்கும் பிறந்த சந்ததியாரே, நீங்கள் இங்கே கிட்டி வாருங்கள். நீங்கள் யாரைப் பரியாசம்பண்ணுகிறீர்கள்? யாருக்கு விரோதமாய் வாயைத் திறந்து, நாக்கை நீட்டுகிறீர்கள்? நீங்கள் துரோகம்பண்ணுகிற பிள்ளைகளும், கள்ளச் சந்ததி யாருமல்லவோ? நீங்கள் பச்சையான சகல மரத்தின்கீழும், விக்கிரக தேவர்களோடே மோகாக்கினியில் வெந்து, பள்ளத்தாக்குகளிலே கன்மலை வெடிப்புகளின் கீழ்ப் பிள்ளைகளைக் கொன்றுபோடுகிறவர்கள். **- ஏசாயா 57: 1-5**

**தொடரும்...**

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# வடக்கு கிழக்கில் உள்ள இளைஞர், யுவதிகள் மத்தியில் உள்ள எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட வேண்டும்

## முன்னாள் எம்.பி.செல்வம் அடைக்கலநாதன்




- எஸ்.ஆர்.லெம்பேட் (22-10-2024)

வடக்கு கிழக்கில் உள்ள இளைஞர், யுவதிகள் மத்தியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆர்வம் காணப்படுகிறதோடு, இனப்பிரச்சினையும் தீர்ப்பதற்கான வழி வகைகளையும் கையாள வேண்டும் என்கிற விடையத்தையும் அவர்கள் எதிர்பார்த்துள்ளதாக வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 22-10-2024 அன்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி வடக்கு கிழக்கில் தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றது. இதனுடாக மக்களின் நிலைப்பாட்டையும் தெரிந்து கொண்டுள்ளோம்.

இளைஞர் மத்தியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆர்வம் காணப்படுகிறது. மேலும் இனப்பிரச்சினையும் தீர்ப்பதற்கான வழி வகைகளையும் நாங்கள் கையாள வேண்டும் என்கிற விடையத்தையும் எதிர் பார்க்கின்றனர்.

குறித்த இரு விடயங்களையும் ஒரே திசையில் கொண்டு செல்ல வேண்டும் என்கிற சூழ்நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது.

திறமையுள்ளவர்கள் தெரிவு செய்யப்படாமல், அரசியல் ரீதியான செயல் பாடுகளில் தங்களுடன் நிற் கின்றவர்களுக்கு சில அமைச்சர்களைக் கொண்ட கட்சிகள் வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொடுத்துள்ளனர்.

குறித்த விடையத்தில் இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது ஊழல் அற்ற அரசாங்கம் என கூறப் படுகின்ற தற்போதைய ஜனாதிபதியின் கூற்று எல்லாம் அனைத்து அபிவிருத்தி ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என இளைஞர்கள் கூறுகிறார்கள்.

ஆகவே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு குறித்த இரு விடயங்களையும் ஒரே திசையில் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலும் நாங்கள் அபிவிருத்தியோடும், இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான வழி வகைகள் குறித்தும் நாங்கள் சொல்லியாக வேண்டும் என்கின்ற நிலை இருக்கின்றது.

இளைஞர்களின் கோரிக்கைகளை நான் ஏற்றுக் கொள்கிறேன். யாழ்ப்பாணத்தில் ஒரு ஆசனம் குறைக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புகளை தேடிச் சென்றவர்களின் தொகை அதிகரித் துள்ளதான் காரணமாகவே குறித்த ஆசனம் குறைக்கப்பட்டுள்ளது.

பொதுவாக பார்க்கின்ற போது இளைஞர்களின் ஆர்வம் உள்நாட்டிலே வேலைவாய்ப்புக்கள், தொழிற்சாலைகள் அமைத்தல் உள்ளிட்ட பொருளாதார ரீதியாக அவர்களின் சிந்தனைகள் செயல்பட ஆரம்பித்துள்ளது. எனவே இளைஞர்,யுவதிகளின் உடைய சிந்தனைகளை ஒரு பெறுமதியாக ஏற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# தமிழ் மக்களின் தேசிய இன பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் பலமான ஒரு கூட்டணியாக எமது கூட்டணி காணப்படுகின்றது

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்




- எஸ்.ஆர்.லெம்பேட் (21-10-2024)

அரசாங்கம் தமிழ் மக்களுக்கு தேசிய இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்பதை கூறி கொண்டுள்ள நேரத்தில் வடக்கு கிழக்கில் போட்டியிடுகின்ற ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை தவிர ஏனையவர்கள் தேசிய இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை என்பதை அரசாங்கத்தின் அதே நிலைப்பாட்டுடன் ஆதரவாக செயல்பட்டு வருவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 21-10-2024 அன்று திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு வடக்கு கிழக்கில் இம்முறை போட்டியிடுகின்ற மிக பலமான கூட்டணியாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சங்கு சின்னத்தில் போட்டியிடுகிறது.

அதே வேளை இத் தேர்தலானது அதிகூடிய பாராளுமன்ற வேட்பாளர்களை கொண்டு வெற்றி பெற்று பாராளுமன்றம் செல்லுகின்ற ஒரு கூட்டணியாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியாக காணப்படுகின்றது.

தமிழ் மக்களின் தேசிய இன பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்கிற விடையத்தில் பலமான ஒரு கூட்டணியாக எமது கூட்டணி காணப்படுகின்றது.

தமிழ் மக்களுக்கு கடந்த 75 வருடங்களாக ஒரு தேசிய இனப்பிரச்சினை காணப்படுகின்றது. தேசிய இனப் பிரச்சினைக்காக பல வருடங்களாக அகிம்சை ரீதியாகவும், ஜனநாயக ரீதியாகவும் தமிழ் மக்கள் போராடி உள்ளனர். இதனால் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

தமிழ் மக்களின் தேசிய பிரச்சினையை முன் நிறுத்தி நாங்கள் வடக்கு கிழக்கில் எமது வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது நாங்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி இருந்தோம். மிகக் குறுகிய காலத்தில் 2 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் எமக்கு வாக்களித்து உள்ளனர்.

அது இந்த பாராளுமன்ற தேர்தலில் இரட்டிப்பான ஆதரவை தமிழ் மக்கள் எங்களுக்கு வழங்குவார்கள்.

இந்த தேர்தல் காலத்திலே அரசாங்கம் தமிழ் மக்களுக்கு தேசிய இனப்பிரச்சினை இல்லை என்பதை கூறி கொண்டுள்ள அதே நேரத்தில் வடக்கு கிழக்கில் போட்டியிடுகின்ற ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை தவிர ஏனையவர்கள் தேசிய இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை என்பனை அரசாங்கத்தின் அதே நிலைப்பாட்டுடன் ஆதரவாக பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்கள் இத் தேர்தல் களத்தில் செயல்பட்டு வருகின்றனர்.

தமிழ் மக்கள் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி யை பலப்படுத்த வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

மக்கள் எங்களுக்கு இரட்டிப்பான ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. என அவர் மேலும் தெரிவித்தார்.

# இவ்வார ராசிபலன்

## 25-10-2024 வெள்ளி தொடக்கம் 31-10-2024 வியாழன் வரையும்




**மேஷம்:** எதிரிகள் உதிரியாகக்கூடிய வாரம். செயல் திறமை வெளிப்படும். உடல்நலனில் அக்கறை தேவை. விருந்தினர் வருகை உண்டு. உத்தியோக இடமாற்றம் ஏற்படும். புதிய நட்பு உருவாகும். வாகன செலவு ஏற்படும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆலோசனை பலன் தரும். குடும்ப கௌரவம் உயரும். அலைச்சல் அதிகரிக்கும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். கண் நோய் வந்து போகும். திடீர் திருப்பம் ஏற்படும். கன்னிப்பெண்களிடம் கவனம் தேவை. புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். வெறுப்புகள் அகலும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். உத்தியோக உயர்வு கிட்டும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். பெரிய வாய்ப்புகள் தேடி வரும். பணியில் ஆர்வம் ஏற்படும். கடன்சுமை குறையும். விருப்பமான தொழில் அமையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். தனலாபம் கூடும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். மற்றவரிடத்தில் மரியாதை உயரும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பெரியோர்களை அனுசரித்து செல்வது நல்லது. வழக்கு முடிவுக்கு வரும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க வேண்டும். தன்னம்பிக்கை துளிர்விடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுக பெருமான், அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,H




**ரிஷபம்:** மனம் எதிர்பார்த்த வளர்ச்சி கிட்டும் வாரம். திறமைகள் வெளிப்படும். பணியில் உயர்வு கிட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். கடல் கடந்த பயணம் உண்டாகும். உடன் பிறப்புக்களால் உதவி கிட்டும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். வங்கி சேமிப்பு உயரும். அனுகூலம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். கஷ்ட காலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். உற்சாகம் அலைமோதும். இடமாற்றம் உண்டு. தொழில் மேன்மை உண்டு. பயணத்தடை ஏற்படும். வேலை வாய்ப்புக் கூடும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் தரும். பணப்பிரச்சனை தீரும். புதிய எண்ணம் நிறைவேறும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பதவி வாய்ப்பு வரும். முயற்சிகள் பலன் தரும். பொன், பொருள் சேரும். விருப்பங்கள் நிறைவேறும். வருத்தங்கள் மறையும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். முயற்சிகள் வெற்றி தரும். பெருமைகள் உயரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். பொறியியல் துறை லாபம் தரும். தோற்றப் பொலிவு கூடும். எதிரிகள் பலம் குறையும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். நட்பு வட்டம் விரிவடையும். இரகசியம் காப்பது நல்லது. அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பங்குச்சந்தையில் லாபம் பெருகும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோகப் பலன் கூடும். பணப்புழக்கம் சரளமாகும். பகை மறையும். கணவன், மனைவி உறவு தித்திக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 3,1,6,9
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,S




**மிதுனம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் தொல்லைகள் குறையும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் கூடும். மாற்று யோசனை பலன் தரும். விளையாட்டுத்துறையில் ஆர்வம் கூடும். வரவுகள் திருப்தி தரும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். பெண்களுக்கு பெருமை சேரும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். குடும்பத்தில் குழப்பம் நீங்கும். புத்திரர் வகையில் சந்தோஷம் கூடும். பெருமைகள் கூடும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து போகும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிடைக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடுங்கள். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. மனதில் மகிழ்ச்சி கூடும். புத்தி சாதுர்யம் கூடும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். சிக்கனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 6,2,1,7
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,C




**கடகம்:** விரக்திகள் மறையும் வாரம். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கும், கலைஞர்களுக்கும் ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் பெருகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. புத்தி சாதுர்யம் பெருகும். புதிய நட்பு உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வெளியூர்ப் பயணம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளின் தொல்லைகள் ஒழியும். பணவரவு சுமாராக இருக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. நவகிரஹ அனுகிரஹம் கூடும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கைக்கூடும். இல்லத்தில் அமைதி கூடும். வார்த்தைகளில் நிதானம் தேவை. காதல் கைக்கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். தொட்ட காரியம் ஜெயமாகும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். இனம் புரியா சந்தோஷம் குடிகொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பொது வாழ்வில் புகழ் கூடும். திருமண முயற்சி பலன் தரும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். எதிரிகள் விலகி செல்வார்கள். கால்நடைகளால் லாபம் கிட்டும். புதிய நண்பர்களை சந்திப்பீர்கள். அரசு வழியில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 5,4,1,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,S



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

SRJ "ராஜயோகம்" Lion Dr.K.Ram Ph.D (USA)
S R J GEMS™ JEWELLERS
எங்கேயும் எப்போதும் SUCCESS





**சிம்மம்:** சொந்தங்களால் மனநிறைவு கிடைக்கும் வாரம். பெருமைகள் கூடும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். நீண்டநாள் பிரச்சனை முடிவிற்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேலைபளு அதிகரிக்கும். உதவிகள் கிட்டும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். நல்லோர்களின் பாராட்டு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். உண்மைகள் வெளிப்படும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பெண்களுக்கு சுபசெய்தி வரும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். ஆடை, அணிகலன்கள் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கைத் தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. மருத்துவச் செலவு குறையும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். கோதுமை தானம் குல விருத்தி சேரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. சாதனையான காலம். எதார்த்தமாக செயல்படவும். பக்குவமான பேச்சு பயன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,2,1,9
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,A




**கன்னி:** புகழும், புண்ணியமும் கிடைக்கும் வாரம். கலைத்தொழில் திருப்தி ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கமிஷன் தொழில் லாபம் தரும். கட்டிடத்தொழிலில் கவனம் தேவை. புதிய முதலீடு உருவாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண் வழி பிரச்சனைகள் முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். பணவரவு உண்டு. கமிஷன் தொழிலில் லாபம் தரும். பயணத்தால் லாபம் கூடும். பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பலன் உண்டு. ஆலோசனைகள் பலன் தரும். காதல் கைக்கூடும். விவசாயிகள் பயன் பெறும் காலம். வாகன செலவு ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். உடல்நலனில் அக்கறை தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவு ஏற்படும். நன்மைகள் அதிகமாகும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். பாராட்டுக்கள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். ஆண்கள் அதிகாரம் உயரும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 8,1,4,5
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,H




**துலாம்:** தொட்டது துலங்கும் வாரம். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். சுறுசுறுப்பு பெருகும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. கணவன் மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். சாமர்த்தியமாக செயல்படுவீர். தாய்ப்பாசம் அதிகரிக்கும். பாகப்பிரிவினை ஏற்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு படிப்பில் எச்சரிக்கை தேவை. வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். சேமிப்பு உயரும். புதுமைகள் நிறைந்த காலம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேசப்பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். விறுவிறுப்பான காலம். உடல்பொலிவு கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அரசமரப்பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 6,9,7,2
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,J


(தொடர்ச்சி 26 பக்கம்)

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
1117



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## ஸ்ரீ கிருஷ்ணன் கோவில் திருகோணமலை

-------------

*" அத்தனாகி அன்னையாகி ஆளும் எம்பிரானுமாய்*
*ஒத்தொவ்வாத பல் பிறப்பொழித்து நம்மை ஆட்கொள்வான்*
*மத்தனார் முகுந்தனார் புகுநடது நம்முள்மேவினார்*
*எத்தினால்இடர்க்கடல் கிடத்தி ஏழை நெஞ்சமே. "*

1941 ஆம் ஆண்டு ஆலயத்திலே பல திருப்பணி வேலைகள் நடைபெற்று, குடமுழுக்கு விழா சிறப்பாக நடந்தேறியது. ஆயினும் 1942 ஆம் ஆண்டு இடம்பெற்ற யப்பானியரின் குண்டுவிச்சினால் ஆலயப் பராமரிப்பு சீர்குலைந்து காணப்பட்டது. இரண்டாவது உலகயுத்தம் காரணமாக, திருகோணமலைப்பிரதேசத்திலுள்ள ஆலயங்கள் பல பராமரிப்பாரின்றிக் காணப்பட்டது. அவ்வாறான ஒரு நிலை, ஸ்ரீகிருஷ்ணன் கோவிலுக்கும் ஏற்பட்டது. ஆயினும் பதட்டமான சூழ்நிலையிலும் நித்தியபூசைகள் இவ்வாலயத்திலே நடந்துள்ளன. பல தசாப்தங்களின் பின்னர் 1980 ஆண்டு காலப்பகுதியிலும், அதன் பின்னரும் ஆலயத்திலே பல திருப்பணிகள் இடம்பெற்றுள்ளன.

ஸ்ரீகிருஷ்ணன் ஆலயத்தின் கருவறை மிக அழகிய விமானத்தோடு காணப்படுகின்றது. கருவறையிலே ருக்மணி, சத்தியபாமா சமேதரராக ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா எழுந்தருளியுள்ளார். அர்த்தமண்டபத்தில், ருக்மணி, சத்தியபாமா சமேதரராக ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் எழுந்தருளி விக்கிரகமும், வரதராஜப்பெருமாள், நாகதம்பிரான் ஆகியோருடைய சிலா விக்கிரகமும் வைக்கப்பட்டுள்ளது. ஸ்நபன மண்டபத்தில் ஸ்ரீ நாராயணமூர்த்தியும், ஸ்தம்ப மண்டபத்தில் கருடாழ்வாரும், ஸ்ரீ ராமானுஜரும் நிறுவப்பட்டுள்ளனர்.

இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம், ஆவணி மாதத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்ற தினத்தை முதல் நாளாகக் கொண்டு, பத்துநாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். வைகாசித் திருவோணத்தில், கம்சன் கதை படிக்கப்பட்டு கிருஷ்ணபரமாத்மாவிற்கு உற்சவம் நடைபெறும். வைகாசித் திருவோணத்தை கிருஷ்ண பரமாத்மாவின் அவதார தின விழாவாகவும், அதனையடத்துவரும் ஐந்தாம் நாள் ருக்மணி கல்யாண நாள் விழாவாகவும், ஆறாம் நாள் கம்சன் கதை விழாவாகவும், ஏழாம் நாள் வாணாசுரன் போராகவும், பத்தாம்நாள் சத்தியபாமா கல்யாண விழாவாகவும் அலங்கார உற்சவம் நடைபெறும்.

ஆவணிமாத ஜென்ம அஷ்டமியன்று உறியடிவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்வாலயத்தில் பல சிறப்பு விழாக்கள் கொண்டாடப்படுவது வழக்கம். புரட்டாதிச் சனிவாரத்தில் பெருந் திரளான மக்கள் இவ்வாலயத்தில் கூடுவது வழக்கம். நுவக்கிரகங்களுள் மற்றொன்றுக்குமில்லாத தனிச்சிறப்பு சனீஸ்வரனுக்குண்டு. ஈஸ்வரன், பகவான் ஆகிய சிறப்புக்களால் அழைக்கும் பெருமை பெற்றவர். "சனியைப்போல் கொடுப்பாம் இல்லை: கெடுப்பாருமில்லை" என்று சொல்வார்கள். துலாக்கோல்போல் அமைந்து நேர்மையாக அவரவர் பலன்களை வழங்கும் சனீஸ்வரனை அவரது தினமான சனிக்கிழமைகளில் பிரார்த்தித்த, வழிபாடுகள் செய்து விரதமிருக்புகும் வழக்கம் நீண்டகாலமாக மக்களிடையே காணப்படுகின்றது.

ஒவ்வொரு கிழமைகளிலும் விரதமிருக்க முடியாதவர்கள் புரட்டாதிச்சனி நாட்களில் விசேஷமாக விரதத்தனைக் கடைப்பிடிப்பர். சுனிக்கு அதிபதி விஷ்ணு ஆகையால் விஷ்ணு ஆலயங்களிலும் விசேஷ வழிபாடுகள் இடம்பெறும். இந்தவகையில் திருஜகோணமலையில் அமைந்து காணப்படும் ஸ்ரீ கிருஷ்ணர் கோயிலும் சிறப்புடையதாகக் காணப்படுகின்றது. இவற்றோடு, கார்த்திகை விளக்கீட்டன்றும், இரவில் விசேட திருவிழாவும், மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசி விழாவும், திருப்பாவை விழாவும், ஒவ்வொரு ஏகாதசியிலும் சிறப்பான திருவிழாவும், இவ்வாலயத்தில் வழமையாக நடைபெறும் விழாக்களாகக் காணப்படுகின்றன.

திருமால் மும் மூர்த்திகளிலே காக்குங் கடவுளாக விளங்குகின்றார். திருமாலை விஷ்ணு என்றும் கூறுவர். உலகத்து உயிர்களைக் காக்கும் கடவுள் இவராதலின், அவ்வப்போது உலகத்தில் மனிதரைப்போலத் தோன்றுவார். வாழும் மனிதருள் தகுந்த ஒருவரிடம் தமது சக்தியைச் சிறிதளவு கொடுத்து அவரைக் கொண்டு பல காரியங்களை நடத்திச் செல்வார். இவ்வாறானவர்களைத் தெய்வ அருள் பெற்றவர்கள் என்று அழைக்கின்றோம். தாமே மானிட வடிவந் தாங்கி மண்ணுலகிற்கு இறங்கி வருவதையே அவதாரம் என்று அழைப்பது வழக்கம். திருமால் பத்து அவதாரங்களை எடுத்துள்ளார் பத்து அவதாரங்களும் அநீதியைக் கொன்று நீதியை, தர்மத்தை நிலைநாட்ட எடுத்த அவதாரங்களாகவே கருத வேண்டும்.

திருமால் இரணியாக்கனை அழிக்க எடுத்த அவதாரம் வராக அவதாரம். இரணியகசிபுவை அழிக்க எடுத்த அவதாரம் நரசிம்ம அவதாரம். அசுரர்களை அடக்கி தேவர்கள் அமிர்தம் பெற எடுத்த அவதாரம் கூர்ம அவதாரம், அசுரனாகிய மகாபலியை அழிக்க எடுத்த அவதாரம் வாமனஅவதாரம், ஹயக்கிரீவனை அழித்து வேதங்களைக் காப்பாற்ற எடுத்த அவதாரம் மச்சாவதாரம். அரசகுலத்தினர் மக்களைத் துன்புறுத்தியபோது, ஆதனைத் தடுக்க எடுத்த அவதாரம் பரசுராம அவதாரம். இராவணனைக் கொன்று நல்லோர்களைக் காக்க எடுத்த அவதாரம் இராமவதாரம். கம்சனைக் கொல்லவும், பஞ்சபாண்டவருக்குத் துணையாயிருக்கவும் கிருஷ்ணஅவதாரம் எடுத்தார். திருமாலின் அவதாரமாகப் புத்த அவதாரமும் கொள்ளப்படுகிறது. இதனைப் பலராம அவதாரம் எனவும் கூறுவர்.

கலியுக முடிவில் உலகத்தை ஆளுபவர்கள் அளவிடமுடியாத அக்கிரமங்களையும், அநியாயங்களையும் செய்யும்பொழுது திருமால், கல்கி அவதாரம் எடுப்பார் எனக் கூறப்பட்டுள்ளது. இந்த அவதாரத்தின்போது தீயவர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவார் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த அவதாரம் ஏற்கெனவே தமிழீழத்தில் நிகழ்ந்துவிட்டதோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது. அனைத்து அவதாரங்களுள்ளும் கண்ணன் அவதாரமும், இராமாவதாரமும் ஆழ்வார்களை மிக வசீகரித்த அவதாரமாகக் கருதப்படுகின்றது. பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகவும், ஆண்டாள் கண்ணனைக் காதலனாகவும் கண்டனர். இவ்வாறான பல சிறப்புக்கள் பொருந்திய கிருஷ்ண அவதாரத்தினைத் தெய்வமாகப் போற்றி வணங்கும் மரபின் வெளிப்பாடாகத் திருகோணமலையில் அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணன் ஆலயம் காணப்படுகின்றது.

*" அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு*
*வுடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு*
*வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு*
*படைப்போர் புக்கு முழங்கும் அப் பாஞ்சசன்னியமும் பல்லாண்டே. "*

**வளரும்...**



# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** சாதனைகள் படைக்கும் வாரம். பெண்களுக்கு யோகம் கூடும். காதலர்களுக்கு கசப்பு நீங்கும். கடன்சுமை குறையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். தாய்வழி தகராறு குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகரிக்கும். சொத்துக்களால் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். மனைவி அன்பு அதிகரிக்கும். புது முயற்சிகள் பலன் அளிக்கும். மருத்துவச் செலவு குறையும். பேச்சில் நிதானம் தேவை. விரயங்கள் கூடும். பயணங்களால் பலன் தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். பொருளாதாரம் உயரும். கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். பிரச்சனைகள் முடிவிற்கு வரும். மாற்று மருத்துவம் பலன் தரும். உடல்நலம் சீராகும். வியாபாரம் சுமாராக இருக்கும். ஊதிய உயர்வு கிட்டும். அலைச்சல்கள் அதிகரிக்கும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். திருப்தி பெருகும். நிர்வாகச் செலவுகள் கூடும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். தேக ஆரோக்கியம் மிளிரும். தொழில் அபிவிருத்தி ஏற்படும். மாணவர்கள் பாராட்டு பெறுவர். சந்தோஷம் பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 7,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,F




**தனுசு:** பொறுப்புக்களும், சிறப்புக்களும் சேரும் வாரம். பெற்றோர்களின் ஆசி கிட்டும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. கல்விச்செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத்தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்பப் பாசம் அதிகரிக்கும். முயற்சி பலன் தரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டு பெருகும். புதிய தொழில் அமையும். வீண் விரயம் அதிகமாகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். வேண்டாத விஷயங்கள் விலகும். பணியாட்கள் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. பாதகம் விலகும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பொருள்சோதம் தரும். கல்வி மேன்மை தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. பிரார்த்னை நிறைவேறும். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். அறிவாற்றல் பளிச்சிடும். புதிய பதவிகள் கிட்டும். தன்னம்பிக்கை கூடும். வேண்டாத நபர் விலகுவர். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கைகூடும். வாகன அபிவிருத்தி உண்டு. எந்திர தொழில் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிதுர்க்காதேவி, அதிர்ஷ்ட எண்: 3,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,E




**மகரம்:** கன்னியமான புண்ணியங்கள் சேரும் வாரம். பதவி உயர்வு ஏற்படும். பக்குவமான பேச்சு அவசியம். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். உடல் உபாதை தோன்றும். வியாபார விரயம் கூடும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். பயணம் ஆதாயம் தரும். தொழில் வழி தொல்லை குறையும். சுய பலம் கூடும். பொறுப்புக்கள் கூடும். கணவன், மனைவி வேறுபாடு அகலும். சலசலப்பு குறையும். உடல்நலனில் கவனம் தேவை. பற்றாக்குறை நீங்கும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் உருவாகும். முத்தான வாய்ப்பு பெருகும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கடன் சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். பயணம் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு வேலை பளு கூடும். பயணங்களால் பணம் கரையும். கண் சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பாக்கிகள் வசூலாகும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வீடு தேடி வரும். பணிவான பேச்சுக்கள் தேவை. மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் நிறைவேறும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். புதிய கடன் வாங்க நேரிடும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கலைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் சாதகமான காலம். சகோதரியினால் நன்மை உண்டு. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரபஞ்ச கடவுள், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,N




**கும்பம்:** பங்குச்சந்தையில் லாபம் தரும் வாரம். சச்சரவுகள் அகலும். உடல்நலம் மேம்படும். கணவன், மனைவி உறவு மேம்படும். கணினி துறையில் ஊதிய உயர்வு கிட்டும். நலமும், நன்மையும் பெருகும். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகளிலிருந்து விடுபடுவீர். மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். மாணவர்களுக்கு மகிழ்ச்சியான காலம். இனிப்பான செய்திகள் வரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். முதலீடுகளில் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். மனமகிழ்ச்சி கூடும். மேன்மையான காலம். விவேகமான பேச்சுக்கள் குறையும். வீண் வம்பு அகலும். தந்திரமாக செயல்படுவீர்கள். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சித் தரும். சொத்துக்களால் லாபம் தரும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்களின் அன்பு கூடும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. உறவினர் பகை ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வாழ்க்கையின் பிடிப்பு அதிகரிக்கும். பெண்களுக்கு அணிகலன் சேரும். யோகப் பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். பாராட்டுக்கள் கூடும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வருமான திருப்தி தரும். புது முயற்சிகளை தள்ளிப் போடவும். பெருமிதம் நிறைந்த காலம். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதிதேவி, அதிர்ஷ்ட எண்: 5,2,1,3
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,Z




**மீனம்:** சாதனை படைக்கும் காலம். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதுமுயற்சிகள் பலன் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். கல்வியில் ஆர்வம் கூடும். கடன் சுமை குறையும். பருப்பு தானம் பாவம் போக்கும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். பணம் புரளும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். வாழ்க்கைத்துணையால் வளம் பெருகும். கடன் பாக்கிகள் வசூலாகும். வரவுகள் திருப்தி தரும். வாகன யோகம் உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். ஆபத்துக்கள் விலகும். பயண முயற்சி பலன் தரும். நினைத்த விஷயம் நிறைவேறும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். பாதகமான சூழ்நிலை விலகும். உடல்நலம் கவனம் தேவை. பிள்ளை வழிச் செலவுகள் அதிகரிக்கும். மெத்தனப்போக்கு விலகும். ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். உடல் உபாதை அதிகமாகும். குடும்ப ஒற்றுமை நிறையும். குதூகலம் அதிகமாகும். மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு குறையும். கனவுத்தொல்லை உண்டு. நிதி நிலைமை சீராகும். எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பிணிகள் நீங்கும். பல்வலி வந்து நீங்கும். பெண்களின் கௌரவம் உயரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 1,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,B

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் 2024 இற்குரிய விருது விழாவில் ஆறு கனடா வாழ் எழுத்தாளர்கள் கௌரவிக்கப்பெறுகின்றார்கள்

**கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் விருது விழா 2024**

**"வாழ்நாள் சாதனையாளர் விருது பெறும் எழுத்தாளர்கள்/ஆய்வாளர்கள்"**

**TAMIL WRITERS' ASSOCIATION OF CANADA PRESENTS AWARD EVENT – 2024**


பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்


கலாநிதி கௌசல்யா சுப்ரமணிய ஐயர்


திரு. தேசபாரதி வே. இராசலிங்கம்


திரு. முருகேசு பாக்கியநாதன்


திரு. நாகமணி லோகேந்திரலிங்கம்


திரு. வயிரமுத்து திவ்வியராஜன்

அன்புடையீர்
அக்டோபர் 26, 2024 சனிக்கிழமை
பிற்பகல் 1:30 மணி முதல் மாலை 6 மணி வரை
விருதுவிழா–2024
ஸ்காபரோ சிவிக் சென்ரர் மண்டபத்தில்
(Scarborough Civic Centre Auditorium, 150 Borough Dr, Scarborough, ON M1P 4N7) நடைபெறவுள்ளது.
உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். நன்றி.
அன்புடன்
ரவீந்திரநாதன் கனகசபை , தலைவர் (kana -ravi@hotmail .com)
முனைவர் வாசுகி நகுலராஜா , செயலாளர் (vasuki .nagularajah@gmail.com
இராச்குமார் குணரட்ணம் , பொருளாளர் (rajgumar@gmail.com)

31 வது ஆண்டில் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- COMMERCIAL
- INDUSTRIAL
- CONSTRUCTION
- VACANT LAND




**RESIDENTIAL- COMMERCIAL**

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
Subramaniam
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages




இவ்விடத்தில் விளம்பரம்

செய்ய எங்களுடன்

தொடர்பு கொள்ளவும்.

416 752 1524






26 years of publishing

www.uthayannews.ca

UTHAYAN உதயன்

உதயம் 1490 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 25, 2024


# இவ்வருட நாடகப் பெருவிழாவில் "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரனுக்கு வழங்கப்பெற்ற பட்டம்" மதங்க சூளாமணி"





கடந்த 19-10-2024 சனிக்கிழமையன்று ரொறன்ரோ மாநகரில் அழகிய மண்டபம் ஒன்றில் நடைபெற்ற இவ்வருட நாடகப் பெருவிழாவில் "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரனுக்கு மதங்க சூளாமணி" என்னும் பட்டம் வழங்கப்பெற்றது.

கடந்த பல வருடங்களாக கனடாவில் கலை இலக்கியம்- நாடகம்- வானொலித்துறை, பத்திரிகைத்துறை, ஆகியவற்றில் கால்பதித்து வெற்றிவாகை சூடியுள்ள "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன் அவர்கள் கலைஞரும் வானொலி அறிவிப்பாளரும் நடிகையுமான ரூபி யோகதாசன் அவர்களுடன் இணைந்து இவ்வருடம் 19வது ஆண்டில் தமது நாடகப்பெருவிழாவை கனடாவில் உள்ள பல வர்த்தக அன்பர்களின் ஆதரவோடு கடந்த சனிக்கிழமையன்று நடத்தினர்.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)



# இலங்கை எழுத்தாளர் பவானி சச்சிதானந்தன் அவர்களின் நூல்கள் வெளியீட்டு விழா

இலங்கை வாழ் எழுத்தாளரும் கனடா உதயன் தமிழ்நாடு இனிய நந்தவனம் உட்பட இலங்கைக்கு வெளியே பல நாடுகளிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகள் பத்திரிகைகளை தனது படைப்புக்களால் அலங்கரித்துள்ள பவானி சச்சிதானந்தன் அவர்களின் நூல்கள் வெளியீட்டு விழா எதிர்வரும் 03-11-2024 ஞாயிற்றுக்கிழமை அன்று கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஈழத்து கலை இலக்கிய மற்றும் பத்திரிகைத்துறை சார்ந்த "பிதாமகர்கள்" உட்பட இளைய தலைமுறை எழுத்தாளர்கள் கவிஞர்கள் என பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ள இந்த நூல்கள் வெளியீட்டு விழாவில் "வாழ்க்கை என்பது" என்னும் சிறுகதைத் தொகுதியும் "நதிகளின் ஓட்டம் கடலினிலே" என்னும் கவிதைத் தொகுதியும் வெளியிடப்பெறவுள்ளன.

விழா வெற்றி பெற கனடா உதயன் ஆசிரிய பீடமும் அதன் வாசகர்களும் உலகின் பல பாகங்களிலிருந்தும் வாழ்த்துகின்றனர்.

# சிறப்பான இசைப் பயிற்சியோடு மேடையில் "அசத்திய" "கவின் கலாலயா" இசைக் கல்லூரியின் மாணவ மாணவிகள்

"இசைக் கலாமணி" ஸ்ரீமதி கவினாளி ரவீந்தர் அவர்களினால் ஆரம்பிக்கப்பெற்று சிறந்த முறையில் இயங்கிவரும் "கவின் கலாலயா" இசைக் கல்லூரியின் ஆண்டு விழா கடந்த 20-10-2024 அன்று ஞாயிற்றுக்கிழமையன்று மாலை விற்பி நகரில் உள்ள மண்டபம் ஒன்றில் சிறப்பாக நடைபெற்றது.

கர்நாடக பாடல்கள் மற்றும் தமிழிசைப் பாடல்கள் மற்றும் திரை இசைப் பாடல்கள் மற்றும் பக்திப் பாடல்கள் என அனைத்து ரக ரசிகர்களை மகிழ்விக்கும் வகையில் மாணவ மாணவிகள் மேடையில் பாடல்களை சமர்ப்பித்தனர்.

ஆசிரியை ஸ்ரீமதி கவினாளி ரவீந்தர் அவர்கள் வழங்கிய சிறந்த இசைப் பயிற்சி அன்றையை ஆண்டு விழாவில் அனைத்து மாணவ மாணவிகளையும் நேர்த்தியான சமர்ப்பணத்தை வழங்கக் கூடியதாக இருந்தது என்றே கூறவேண்டும்.

இங்கே காணப்படும் படங்களில் இசை மாணவ மாணவிகளின் பெற்றோர்களினால் ஆசிரியை ஸ்ரீமதி கவினாளி ரவீந்தர் அவர்கள் கௌரவிக்கப்பெறுவதையும் பிக்கரிங் நகரில் அமைந்திருக்கும் சிவன் ஆலய நிர்வாகிகளினாலும் கௌரவிக்கப்பெற்ற ஆசிரியை ஸ்ரீமதி கவினாளி ரவீந்தர் அவர்கள் ஆலயத்தின் பிரதம குரு கோபி ஐயா அவர்களினாலும் "அனலை எக்ஸ்பிரஸ்" ஊடக நிறுவனத்தின் அதிபர் விமல் அவர்களினாலும் கௌரவிக்கப்பெறுவதயும் மாணவ மாணவிகள் தங்கள் இசைச் சமர்ப்பணங்களை மேடையில் கூட்டாகவும் குழுவாகவும் வழங்குவதையும் காணலாம்.









# யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திற்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் யூலீ சங்



இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் மற்றும் தூதரக அதிகாரிகள் 24 ஆம் திகதி, வியாழக்கிழமை காலை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமென்றினை மேற்கொண்டனர். ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தினால், யூ.எஸ். எயிட் நிதியுதவியுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் மெய்யியல் துறையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்க செயற்றிட்டத்தின் கீழ் நடாத்தப்படும் "அகம்" உளவளத்துணை நிலையத்துக்கே அமெரிக்கத் தூதுவர் தலைமையிலான குழுவினர் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.